௨௭

ஜோஸிய மித்திரன்

1962 - பிப்ரவரி

மை 7 - 8

JL
LLm211, N61
N61. 9.7-8
158983

நோயிலா வாழ்வே
குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

பிப்ரவரி
1962

38
காசுகள்

# டான்ஸில்ஸ்

இரட்டையர்களாவர். சுவாசகோசத்தில் புகையும் தூசியும் புகுந்து நோய்கள் உண்டாகாதபடித் தடுத்து, தாமே நோயுறும் தியாகிகள்!

அப்படிப்பட்ட தியாகிகளை வெட்டி எறிந்தால் உடலுக்கு ஆயுள் உள்ள வரை ஊனம்தான் என்று எல்லா டாக்டர்களும் ஒத்துக்கொள்கிறார்கள்: ஆனால், டான்ஸில் வீங்கி சீழ்பிடித்தால் அதைக் குணமாக்க வழி அறியாதுதான் கத்தியைத் தேடுகிறார்கள்.

அச் சமயத்தில் ஹோமியோபதியின் பெயரை நிலை நாட்ட, எங்கள்

## ஸில்டோலீஸ்

உபயோகித்தால் போதும்.

* * *

இந்த இனிய மருந்தினால், டான்ஸில் குணமடைந்து சுய வடிவுக்குச் சுருங்கி தன் சேவையைச் சரிவரச் செய்கிறது.

விலை: 50 மாத்திரைகள் கொண்ட ஒரு பாட்டில்: ரூ. 2-50.
500 " " ரூ. 18-00.
(அனுப்பும் செலவு தனி.)

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை:
9, செம்புதாஸ், தெரு,
மதராஸ்-1.


For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratory Only.

# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர்: Dr. V. S. ஸுப்ரமண்யம்



மலர் 9 பிப்ரவரி 1962 இதழ் 7


பொருள் அடக்கம் — பக்கம்


1. கதையைக் கேளடா .... 3
2. தாய்மையும் ஹோமியோபதியும் II .... 7
3. அகோனைடம் நாபிலஸ் .... 12
4. அனுபவங்கள் .... 20
5. செய்திகளும் அபிப்பிராயங்களும் .... 28


## ஹோமியோபதி மித்திரன்

சந்தா விபரம்

| | |
|---|---|
| வருடச் சந்தா .... | ரூ. 3-00 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு .... | ரூ. 0-38 ந.பை. |
| சிலோன், மலேயா ஆகிய வெளிநாடுகளுக்கு வருடச் சந்தா | ரூ. 4-00 |

எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்

## டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

அவர்களால் தமிழில் எழுதப்பட்டவை

| | விலை ரூ. | ந.பை |
|---|---|---|
| மாஸ்டர்-கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிக்கா (1144 பக்கங்கள் உள்ளது) | 20 | 00 |
| பன்னிரண்டு உயிர் உப்புக்கள் (பயோகெமிஸ்டிரி) | 6 | 50 |
| மெடிகல் டிக்ஷனரி-ஆங்கிலச்சொற்களின் உச்சரிப்பும் பொருளும் .... | 6 | 50 |
| நோய்களும் சிகிச்சையும் .... | 5 | 50 |
| ஆர்கனன் ஆப் மெடிஸின் ... | 3 | 00 |
| இருதயமும் சுவாசகோசங்களும் அவ்வுறுப்புகளைப் பரீக்ஷித்து வியாதியை நிர்ணயிக்கும் வழிகளும் | 2 | 00 |
| ஹோமியோபதிக் குடும்ப சிகிச்சைக் குறிப்பு .... | 2 | 00 |
| தாய்த்திரவங்களின் மெட்டீரியா மெடிக்கா .... | 1 | 50 |
| இரத்தசோகை வியாதி விவரமும் சிகிச்சையும் .... | 0 | 25 |
| மூலம் : வியாதி விவரமும் சிகிச்சையும் .... | 0 | 25 |
| நீரழிவு, மதுமேகம் .... | 0 | 25 |
| வயிற்றுக் கடுப்பு or இரத்தபேதி .... | 0 | 25 |
| மேகவெட்டை .... | 0 | 25 |
| பெரியம்மை .... | 0 | 25 |
| காலரா .... | 0 | 25 |
| மலச்சிக்கல் .... | 0 | 25 |

### ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோட்,
சென்னை-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
சென்னை-1.

158983

# கதையைக் கேளடா!

ஒரே ஒரு காடு. அக்காட்டிலே ஒரு ஓனாய். அதற்கு வயதாகி மூப்பு வந்து விட்டது. முன்போல இரையை வேட்டையாடித் தேட முடியவில்லை. பசியோ குடலைப் பிடுங்கித்தின்கிறது. ஆகவே ஓர் தந்திரத்தைக் கையாண்டது.

காட்டில் எங்கேயோ கிடைத்த ஓர் ஆட்டின் தோலைக் கண்டு பிடித்தது அந்த ஓனாய். அதைத் தன் மேலே போர்த்திக் கொண்டது. மேல் பார்வைக்கு ஆடு போல் தோற்றமளித்த ஓனாய் உடனே ஓர் ஆட்டு மந்தையினுள் புகுந்து கொண்டது. எந்த ஆட்டுக்கும் அதன்மீது சந்தேகம் ஏற்படவில்லை. எல்லா ஆடுகளும் அந்த ஓனாயைத் தங்களைப் போன்ற ஒரு ஆடுதான் என்று எண்ணிக் கொண்டிருந்தன. ஓனாயோ பசி வந்த போதெல்லாம் கூட்டத்தை விட்டுச் சற்றே விலகியிருக்கும் ஏதோ ஒரு ஆட்டின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றுவிடும். இப்படியே அது நீண்ட காலம் சுகமான வாழ்க்கை நடத்தி வந்ததாம்.

விலங்கினத்தில்தான் ஓனாய்களும் ஆடுகளும் இருப்பதாக நினைக்க வேண்டாம். மனித இனத்திலும் ஒவ்வொரு துறையிலும் வைத்தியத் துறையிலும் கூட ஓனாய்களும் ஆடுகளும் இருந்து வருகின்றன. இது விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இல்லா விட்டால் இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

பனகல் மகாராஜா மந்திரியாய் இருந்த அந்தக் காலத்திலே ஆயுர்வேதம், சித்தம், யூனானி ஆகிய நாட்டு வைத்திய முறைகளை வளர்க்க வேண்டுமென்று விரும்பினார். அதற்காக இந்திய வைத்தியப் பள்ளியைத் துவக்கி வைத்தார்.

நவீன விஞ்ஞான அடிப்படையில் பயிற்சியும் அறிவும் பெற்றவர்களே இந்திய வைத்தியப் பள்ளிக்கு ஆசிரியர்களாய் இருக்க வேண்டும். இல்லா விட்டால் படிப்பின் தரம் குறைந்து போய்விடுமென்று உரத்த குரலில்

ஊளையிடத் தொடங்கின அலோபதி ஓனாய்கள். அவர்கள் கூறிய வண்ணம் பயிற்சி பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள் ஓரிருவரே இருந்ததால் இந்திய வைத்தியப் பள்ளி ஆசிரியர்களில் எல்லோரும் அலோபதி வைத்தியர்களாகவே இருக்க வேண்டியதாகிவிட்டது.

மேற்படி நிகழ்ச்சி நடைப்பெற்று 30 ஆண்டுகள்தான் ஆகியிருக்கின்றன. இவ்வளவு குறுகிய காலத்திலே இந்திய வைத்தியப் பள்ளியை கலப்பட வைத்தியக் காலேஜாக மாற்றி முடிவிலே மூடு விழாவையும் வெற்றிகரமாய் நடத்தி விட்டனர் அலோபதியர்கள்.

இந்திய வைத்தியப் பள்ளி மாணவர்கள் தங்களுக்கு அலோபதி வைத்தியத்தில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து மறியல் நடத்தினராம். தங்களை ஓனாய்கள் தின்னவில்லையே என்று ஆடுகள் அழுதனவாம் என்று சொல்வதைப் போலத் தோன்றுகிறதல்லவா இது! இது முழுக்க முழுக்க அரசியல் சூழ்ச்சி என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது.

பல்லாயிரக் கணக்கான அலோபதி வைத்தியர்களும் அலோபதி மருந்துத் தயாரிப்பாளர்களும் ஒன்று கூடித் தங்கள் பண பலத்தைக் கொண்டு ஆழமாய் வேரூன்றிவிட்ட சமயத்தில் ஒரு சில கற்றுக் குட்டிகளான ஆயுர்வேத வைத்தியர்களை, தங்களுக்கு வேண்டிய மருந்துகளைத் தாங்களே தேடித் தயார் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் வைத்து விட்டால் எப்படி அவர்களால் அலோபதியர்களை எதிர்த்து நிற்க முடியும்? இவ்விஷயத்தைப் பற்றி கவலைப் பட்டவர்களோ அல்லது கவலைப் படுகிறவர்களோ கிடையாது. விளைவு என்ன? ஆயுர் வேத ஆடுகளை அலோபதி ஓனாய் விழுங்கி விட்டது.

இப்போது கடந்த 1961-ஆம் ஆண்டிலே நடந்த ஓனாயின் திருவிளையாடலைக் காண்போம். புகழ் பெற்ற அலோபதி வைத்தியர்களில் ஒருவராகிய டாக்டர் உமாபதி முதலியார் அவர்களுக்கு நம் ஹோமியோபதியிலே பழக்கம் உண்டு. ஆதலால் ஹோமியோபதி வைத்திய முறையை எப்படி



வளர்க்கலாம் என்பது பற்றி யோசனை கூறும்படி தமிழ் நாட்டு அரசாங்கம் நிறுவிய கமிட்டி ஒன்றில் அவர் தலைவராய் நியமிக்கப் பட்டார். அவர் சமர்ப்பித்துள்ள யோசனைகளைப் பற்றிய விவரங்கள் சுகாதாரப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருக்கின்றன. அதிலிருந்து ஒரு கூடைச் செங்கல்லும் பிடாரி என்ற பழமொழியின் உண்மை தெரிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன் வேறு சில அலோபதியர்கள் கூறிய விஷயங்களைக் கிளிப் பிள்ளை போலத் திருப்பிச் சொல்கிறார் டாக்டர் உமாபதி முதலியார். அது மட்டுமல்ல. ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி யொன்றை ஆரம்பித்து அதன் ஆசிரியர்களாய்த் தன்னையும் மற்றும் சில அலோபதி டாக்டர்களையும் நியமிக்க வேண்டுமென்றும், பயிற்சியின் கால அளவு ஆறரை வருஷங்களாய் இருக்கவேண்டுமென்றும் சொல்கிறார். முதல் ஆறரை ஆண்டுகள் முடிந்த பிறகு மூன்று வருடக் குறுகிய காலப் படிப்பையும் ஆரம்பிக்கலாமாம்.

இந்திய வைத்தியப் பள்ளிக்கு மூடு விழாச் செய்ய 30 ஆண்டுகள் பிடித்தன. ஹோமியோபதிக் கல்லூரிக்கு மூடு விழா நடத்த அவ்வளவு காலம் வேண்டியதில்லை. ஆறரை ஆண்டுகளே போதும் என்று அவர் கருதுவதாய்த் தெரிகிறது. உமாபதி முதலியாரின் சிபாரிசுகளைத் தமிழ் நாட்டு அரசாங்கம் ஏற்றுக் கொண்டு செயலில் இறங்கினால் ஆறரை ஆண்டுக் காலத்தில் ஹோமியோபதி அனைத்தையும் மிச்சம் மீதி இல்லாமல் அலோபதி ஓனாய் விழுங்கி ஏப்பம் விட்டு விடும் என்பதில் சந்தேகமே இல்லை.

இதில் வேதனையைத் தரும் வேடிக்கை என்னவென்றால் எல்லா ஆடுகளும் தங்களை விழுங்க வரும் ஓனாய்களைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் அம்மே, மே, பேபே, மே என்று கூச்சலிட்டுக் கொண்டு புல்லை மேய்ந்து கொண்டு இருந்ததைப் போல நாம் இருப்பது தான்.

அபாயச் சங்கை ஊதி விட்டோம் சரியான நேரத்திலே. ஹோமியோபதியர்கள் விழித்தெழுந்து எச்சரிக்கையாய் இருப்பார்களா அல்லது கதையில் வரும் ஆடுகளைப் போல............ பொறுத்திருந்து பார்ப்போம்.

தென் சென்னை

## ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

"பால நிலையம்", சென்னை-28.

இச்சங்கத்தின் அடுத்த மாதாந்திரக் கூட்டம் 1962, மார்ச் மாதம் 4-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4 மணிக்கு "பால நிலையம்" ஹாலில் நடத்தப்படும்.

அப்பொழுது, டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் டாக்டர் ஹானிமனுடைய "ஆர்கனு"னைப்பற்றிய விரிவுரையைத் தொடர்ந்து நடத்துவார். மற்றும் பலரும் பேசுவார்கள்.

டி. ஆர். வி. ராமன்,
காரியதரிசி.


## நமது விற்பனையாளர்கள்

**திருச்சி :—** Dr. V. மஹாதேவன்,
திருச்சி ஹோமியோ ஸ்டோர்ஸ்,
34, சிங்காரத் தோப்பு,
திருச்சி-8.

**பட்டுக்கோட்டை :-** Dr. P. K. P. முருகையன்,
முருகன் ஆஸ்பத்திரி,
சின்னையா தெரு,
பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் ஜில்லா.

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.


# "தாய்மையும் ஹோமியோபதியும்"—II

Dr. V. S. ஸுப்ரமண்யம்

## 4. உறுப்பும் அமைப்பும்

கட்டழகு படைத்த கன்னியர்கள் கருவுற்று ஒரு பெட்டகத்தைப் பெற்றெடுக்கும் முன் கருவைப் பேணித்தரும் உறுப்புகளும் அமைப்புகளும் எண்ணி எண்ணி வியக்கத்தக்க விதத்திலே அமைந்திருக்கின்றன. குழந்தை வெளியே வருவதற்கு மிகவும் இன்றியமையாத பங்கைச் செலுத்துவது இடை எலும்புக்கட்டாகும். இது பெல்விஸ் (Pelvis) அல்லது கூபகம் எனப்படும். இதனை மேற்பகுதி அல்லது பொய்க் கூபகம் என்றும் கீழ்ப்பகுதி அல்லது உண்மைக் கூபகம் என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். இந்த இடையெலும்புக்கட்டானது முன்பகுதி இலியம் (Ilium), பியூபிஸ் (Pubis), இஸ்க்கியம் (Ischium) எனப்படும் மூன்று எலும்புகளாலும் பின்பகுதியில் சேக்ரம் (Sacrum), காக்ஸிக்ஸ் (Coccyx) எனப்படும் முதுகு எலும்பின் கடைசிப் பகுதியிலும் இணைந்து சுற்றிலும் உறுதியான தசைகளாலும் தசை நார்களாலும் ஏராளமான ரத்தக் குழாய்களாலும் செரிந்து இருக்கும். வளரும் கரு மேல்நோக்கிச் செல்லும்போது பொய்க்கூபகம் கருவைத் தாங்கிக்கொள்கிறது. குழந்தை பிறப்பதற்கு வழியை உண்மைக் கூபகம் உருவாக்கித்தருகிறது.

கூபகத்தின் அளவைப் பொருத்துத்தான் பிரசவத்தின் தன்மை அமையும். கூபகத்தில் ஏதேனும் கோளாறு இருக்குமானால் பிரசவத்தின்போது மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும். எனவே கூபகத்தின் அளவைக்கொண்டுதான் பிரசவம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சாதாரணமாக ஒரு கூபகத்தின் வெளிப்புறக் குறுக்களவு பத்தரை அங்குலமும், உட்புறக் குறுக்களவு ஐந்தரை அங்குலமும், வெளிப்புற நெட்டளவு பன்னிரெண்டரை அங்குலமும், உட்புற நெட்டளவு நான்கரை அங்குலமும் இருக்கும். இதன் வெளிப்புறம் கரடு முரடாக இருந்தாலும்

உட்புறம் மிகவும் ஒழுங்காகவும், மிருதுவாகவும், உறுதியாகவும், நீண்ட வட்ட வடிவமான பள்ளம் அமைந்தும் இருக்கும். இடுப்பெலும்பின் கீழ்ப்பகுதியும் பின்பகுதியும் சேருமிடத்திலிருந்து குறுகலாகத் தொடங்கி மேலே செல்லச் செல்ல அகன்றும் ஒரு புனலைப்போலக் காட்சியளிக்கும். கூபகங்களின் தன்மையை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை சாதாரணக் கூபகம், குறுகிய கூபகம், சிறு குறுகிய கூபகம், பாதிக்கப்பட்ட கூபகம் என நான்கு வகைப்படும்.

*அகன்ற வாயுடைய சாதாரணக் கூபகம்* (Normal Pelvis) :—போதுமான அளவு அகன்று திருகலின்றி ஒழுங்காக இயங்கும் தன்மையுடன் அமையப்பெற்ற இத்தகைய கூபகம் இருந்தால் பிரசவம் மிகவும் சுகமாக முடியும்.

*குறுகிய கூபகம்* (Contracted Pelvis) :—வளமற்ற வாழ்க்கையின் காரணமாகவோ இயற்கை அமைப்பின் நிமித்தமோ இருக்கவேண்டிய அளவு இன்றி குறுகி இருக்கும் இத்தகைய கூபகம் உள்ள பெண்கள் தாய்மையடையும் போது மிகுந்த தொல்லை கொடுக்கும். இத்தகைய கூபகங்களிலே உதயபாகம் எளிதில் பொருந்தாது. அப்படியே பொருந்தினாலும் கீழே இறங்குவது மிகவும் கடினமாக இருக்கும். பூரண வளர்ச்சி அடையாத கருவாக இருந்தால் பிரசவம் அவ்வளவு கடினமாக இருக்காது.

*சிறு குறுகிய கூபகம்* (Small Contracted Pelvis):—குறை மாதத்திலே பிறந்து வளமற்ற நிலையிலே வளர்ந்து இருந்தால் கூபகம் மிகவும் குறுகிவிடுகிறது எனக் கருதப்படுகிறது. இத்தகைய கூபகம் அமைந்த பெண்களின் பிரசவம் அனேகமாக வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுக்கும் முறையிலேதான் சாத்தியமாகும்.

*பாதிக்கப்பட்ட கூபகம்* (Aggrieved Pelvis) :—குழந்தைப் பருவத்திலே ஏற்பட்ட விபத்தாலும் ஆகாரத்திலே சத்துக் குறைந்து ரிக்கெட்ஸ் என்னும் எலும்புருக்கி நோய்க்கு ஆளாகியிருந்தாலும் கூபக எலும்பானது சிறுத்தோ, திருகல்



விழுந்தோ தட்டையாக மாறியோ விடக்கூடும். இத்தகைய பாதிக்கப்பட்ட கூபகத்தை உடைய பெண்கள் மகப்பேறடைவது மிகுந்த தொல்லையை விளைவிக்கும் நிகழ்ச்சியாக இருக்கும்.

எனவே பிறப்பு உறுப்புக்களிலே பொறுப்பு வாய்ந்த உறுப்பு இடை எலும்புக்கட்டாகும். இதன் அமைப்பு ஒழுங்காக இருந்தால் குழந்தையின் உதய நிலைகளில் கோளாறு இருந்தாலும்கூட எளிதாக பிரசவிக்கும்படி செய்யலாம்.

கருப்பை (Uterus) :—அணு குழந்தையாக மாறும்வரை அதனைத் தன்னகத்தே வைத்து வளர்க்கும் இந்தப்பையானது உறுதியான தசை நார்களாலாக்கப்பட்ட ஒரு கெட்டியான தோல் பையாகும். முன்புறம் பெருத்தும், பின்புறம் சிறுத்தும் முத்துப்போன்ற வடிவத்தை உடைய இந்தப் பையானது ஒரு வாழைப்பூவைப்போல கூபகத்திலே தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருக்கும். இது பெரிடோனியம் (Peritoneum) என்னும் ஒரு வகைத் தோலால் போர்த்தப்பட்டிருக்கிறது. இது கரு வளர வளர விரிந்துகொடுக்கும் தன்மை வாய்ந்தது. பின் பகுதியில் ஸெர்விக்ஸ் (Cervix) எனப்படும் கருவாய்க்காலின் பக்கத்தில் பதிந்தும் முன்பகுதி சூற்பையை அடுத்து கருக்குழலோடு ஒட்டியும் இருக்கும். கருப்பையின் உட்புறத்தில் என்டோமெட்ரியம் என்னும் ஒரு மெல்லிய தோல் பொருந்தியிருக்கிறது. இது கருவை ஏற்கும் பொருட்டு உப்பித்தடித்து மிருதுவான பஞ்சணைபோல் மாறிக்கொள்ளும். இது மாதவிடாயின்போது கலைந்து பின்னர் மீண்டும் உருவாகும். கருவுற்றால் இது கருவை ஏற்றுப் பாதுகாக்கும்.

**கருக்குழல்** (Fallopian Tube) சூற்பையிலிருந்து பக்குவப்பட்டு வெளிப்படும் கரு அணுவைத் தன்னகத்தே சுரக்கும் பசையால் ஈர்த்து ஆண் கரு அணுவை ஏற்று இரு அணுக்களும் கலந்த பின் ஒரு வாரம் பாதுகாத்து விரிந்து சுருங்கி கரு அணுவை கருப்பையினுள் மெதுவாக இறக்கிவிடும்.

**சூற்பை** (Ovary) :—கருப்பைக்கு மேலே முந்திரிக் கொட்டை வடிவிலே இரண்டு சூற்பைகள் பொருந்தியிருக்கின்றன. இவை தம்முள்ளே இருக்கும் ஆயிரக்கணக்கான அணுக்களில் மாதந்தோறும் ஒன்றைப் பக்குவப்படுத்தி கருக்குழலுக்கு அனுப்பிவைக்கும்.

**பெண்குறிக் குழாய்** (Vagina) ;—இதன் வழியாகச் சென்றுதான் ஆண் கரு அணு கருக்குழலிலே காத்திருக்கும் பெண் கரு அணுவை அடைய முடியும். இது இரு தொடைகளுக்குமிடையே தடித்த தசை நார்களால் ஆக்கப்பட்டு உட்புறம் மிருதுவான இரண்டு இதழ்களாகச் சேர்ந்து இருக்கும். இதழ்கள் கீழே ஒன்று சேருமிடத்தில் விடபம் இருக்கிறது. அதற்குக் கீழே ஆசனத் துவாரம் இருக்கிறது.

இதழின் ஒரு பகுதியிலே பெண்குறியும் மூத்திரத்துவாரமும் அமைந்திருக்கிறது. பெண்குறியிலிருந்து தொடங்கி கருப்பையின் வாய்வரை ஒரு குழாய் போன்று செல்கிறது. அதை ஒட்டினாற்போல் கரு அணுப்பை இருக்கிறது. கருக்குழல் கருப்பையையும் கரு அணுப்பையையும் இணைக்கிறது. கருக்குழலிலிருந்து கருப்பை முன்பக்கம் அகன்று உப்பிச் செல்கிறது. இதனைத் தாங்கியவாறு கூபகம் அமைந்திருக்கிறது. எனவே கூபகம், கருப்பை, கருக்குழல், சூற்பை, கருப்பாதை, பெண்குறி ஆகியவைகளைப் பிறப்பு உறுப்புகளெனக் கொள்ளப்படுகிறது.

## பிறப்பு

அன்ன நடையும் மின்னலிடையும் மறைந்து பின்னல் நடையும் பெருத்த இடையும் வெளுத்த உடலும் பருத்த வயிறுமாகக் காட்சியளித்துப் பின் ஒரு பத்தரைமாற்றுத் தங்கச் சிலையைத் தந்துவிடும் அற்புத விளைவுகள்தான் எப்படி நிகழ்கின்றன என எண்ணிப் பார்த்தால் இயற்கையின் விநோதம் எத்தகையது எனப் புலப்படும்.



" இன்பசுகந்தருமன்பு பொருந்தி, உணர்வு கலங்கி
ஒழுகு சுரோணித மீது கலந்து பனியிலோர் பாதி,
சிறுதுளி மாது பண்டியில் வந்து பதும வரும்பு
கமடமிதென்று, பார்வை மெய் வாய் செவி
கால் கைகளென்ற உருவமுமாகி உயர்வளர்
மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து "

என மிக எளிமையான முறையிலே விளக்கிவிட்டார் பட்டினத்தடிகள்.

எனினும் பிறப்பின் தத்துவத்தை விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டுள்ள உண்மையையும் நாம் புரிந்துகொள்ள வேண்டுமல்லவா! அப்போதுதான் தாயும் சேயும் ஒருவர்க்கொருவர் பற்றும் பாசமும் கொண்டு வாழ்வதின் மர்மம் விளங்கும். அம்மா என்றவுடன் சுரக்கும் அன்பும் கண்ணே என்றவுடன் பிறக்கும் பாசமும் ஏன் ?

ஓவரி எனப்படும் சூற்பையில் பல ஆயிரக்கணக்கான கரு அணுக்கள் உள்ளன. அவைகளில் ஒவ்வொரு பெண் கரு அணு ஒவ்வொரு திங்களும் மாதவிடாயான சில தினங்களில் பக்குவப்பட்டு கரு அணுப்பையின் மெல்லிய தோலைப் பிளந்து கொண்டு கருக்குழலில் சுரக்கும் பசையால் ஈர்க்கப்பட்டு கருக்குழலில் வந்து தங்கி ஆண்கரு அணுவின் வரவுக்காகக் காத்திருக்கும். கலவியின்போது வெளிப்படும் ஆண் கரு அணு நீந்திச்சென்று அங்கே காத்திருக்கும் பெண் கரு அணுவுடன் கலந்து வளரத் தொடங்குகிறது. ஒன்றுபட்ட கரு அணுக்கள் இரண்டிரண்டாகப் பிளந்து பல ஆயிரக்கணக்கான அணுக் கூட்டமாக மாறி ஒரு பந்துபோல் திரண்டு ஒரு வாரத்தில் கருக்குழல் விரிந்து சுருங்கி இயங்குவதால் மெதுவாக இறங்கி கருப்பையை அடைகிறது. உப்பித் தடித்துப் பஞ்சணை போல் மாறிவிட்ட கருப்பையின் உட்புறத்தோல் கருவைத் தன்னகத்தே ஏற்று பதித்துவைத்துப் பாதுகாக்கிறது.

(தொடரும்).

# அகோனைட் நாபிலஸ்

(மூலம் : டாக்டர் கெண்டின் மெடீரியா மெடிகா)

தலைவலிகளை வர்ணிப்பது இயலாத காரியம். அவை அவ்வளவு கடுமையாய் வருகின்றன. **பயம்,** சுரம், கவலை ஆகிய குறிகளுடன் மூளையிலும் மண்டைத் தோலிலும் எரிச்சலுடன் கிழிக்கும் வலிகள் ; ஜலதோஷம் பிடித்ததாலும் மூக்கிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த கழிவைத் தடை செய்ததாலும் தோன்றும் தலைவலி. திடகாத்திரமானவர்களை ஜலதோஷம் பிடித்துக்கொண்டிருக்கும்போது வறண்ட குளிர் காற்றில் உலாவியதால் மூக்கிலிருந்து வந்துகொண்டிருக்கும் கழிவு உடனே அடங்கிவிடுகிறது. கண்களுக்கு மேற்புறமாய் கடுமையான தலைவலி. தலைவலி, கவலை, முகத்தில் சூடு ஆகியவைகளுடன் மூளையினுள் இரத்தத் தேக்கம்.

கண்களைப்பற்றிய நோய்களில் **அகோனைட்** தேவைப்படும் என்பதை அறிவிக்க ஏராளமான குறிகள் இருக்கின்றன. கண்களில் திடீரென்று வேக்காடு தோன்றும். கண்களில் இரத்தந் தேக்கம். கண்கள் இரத்தம்போல் சிவந்திருக்கும். எல்லா இழையங்களிலும் திடீரென்று வேக்காடு ; **ஜலதோஷம் பிடித்தல், வறண்ட குளிர்காற்றில் அடிபடுதல்** ஆகிய காரணங்களால் இமைகளின் உட்புறத் தோலில் வேக்காடு முதலியவை தோன்றுதல்.

ஹோமியோபதி வைத்தியத்திலே ஒரு பாடம் நீண்டகாலமாகப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. வேக்காட்டின் முதல் நிலைமையில் அகோனைட்டைக் கொடு என்பதே அது. நம் நூல்களில் அவ்விதம் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அது நல்ல பாடம் அல்ல. எவ்வகையான உடலுள்ளவர்களுக்கு என்றோ அல்லது அது எப்படி வருகிறதென்றோ பாடத்தில் சொல்லப்படவில்லை. அவ்விதம் தொழில் செய்யக்கூடாது. அகோனைட் கேசுக்கு வேண்டிய குறிகள் யாவும் இருக்கிறதா என்று தேடு. இல்லாவிட்டால் மேலுந் தகுதி வாய்ந்த வேறு மருந்தொன்றைக் கொடு. சுரத்துக்கு அகோனைட் கொடுப்பது என்ற மற்றொரு பழக்கமும் இருந்து



வந்திருக்கிறது. பழக்கத்துக்கு அடிமையான நமது முன்னோர்கள் அகோனைட்டைச் சுரமருந்தாய் உபயோகித்தனர். ஆனால் அது கெட்ட பழக்கமென்பதில் ஐயமில்லை.

அகோனைட்டில் கண்களில் வேக்காடு மிகத் திடீரென்று தோன்றுவதால் சிறிது நேரத்தில் இவ்வளவு கடுமையான வேக்காடு எப்படி உண்டாகியது என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கும். எவ்விதக் கழிவும் வெளியாகாமல் அல்லது மிகக் கொஞ்சமாய் நீர் கலந்த பீளையுடன் கண்களில் கடுமையான விக்கம். கெட்டியான பீளையுடன் திடீரென்று தோன்றும் கண் வேக்காடு அகோனைட் நோயாய் இருக்கவே முடியாது. வேக்காட்டினால் விளைவுகள் ஏற்படுவது அகோனைட்டில் இல்லாத விஷயம். வேக்காட்டைப் பின் தொடர்ந்து விளைவுகள் தோன்றும் கேசுகளுக்கு வேறு மருந்தே தேவைப்படும். சுரத்தில் அகோனைட் நோயாளிக்கு இருக்கவேண்டிய குறிகள் இருந்தால்தான் அம்மருந்தைக் கொடுக்கலாம். அகோனைட்டுச் சுரத்துடன் வெளிச்சத்தைச் சகிக்க முடியாத தன்மை காணப்படும். "சுரத்துடன் அளவு கடந்த அமைதியின்மை." . கண்மணிகள் சுருங்கி விழிகள் நிலைக்குத்திட்டிருத்தல். விழிகளின் உட்புறத்தே கடுமையான கடுப்பு வலியும் வேக்காடும். குறிகள் ஒற்றுமையாய் இருந்தால்தான் அகோனைட்டை உபயோகிக்கவேண்டும். ஒரு வேக்காட்டு நோயில் அது நீண்டகாலம் நீடித்திருக்கலாம். சீழ்க்கொள்ளலாம் என்று தோன்றினால் அகோனைட்டின் குறிகள் இருக்க மாட்டா. இரத்தத்தில் நச்சுப்பொருள்கள் சேர்ந்ததினால் ஏற்படும் ஸ்கார்லேட் சுரம், டைபாய்டுச் சுரம் முதலிய சுரங்களுக்கு அகோனைட் ஒருபொழுதும் உபயோகிக்கக் கூடாது. அதுபோன்ற நிலைமைகளில் அகோனைட்டின் கடுமையான குறிகளில் எதையும் நாம் பார்க்கமுடியாது. நரம்பு வேதனை எச்சமயத்திலும் காணப்படுவதில்லை. அதற்கு நேர்மாறாக, மயக்கம், சோம்பல், ஊதா நிறமுள்ள சருமம் ஆகிய குறிகள் காணப்படும். அகோனைட்டில் சருமம் நல்ல சிவப்பாய் இருக்கும். தொற்றும் குணமுள்ள சுர நோய்களிலும் பெருவாரியாய் ஏற்படும் கொள்ளைச் சுரங்களிலும் அகோனைட்டைக் கொடுக்காதே. மெதுவாகத் தோன்றி விடாமல் அடிக்கும் சுரங்களில் அகோனைட்டைப் பற்றிச் சிறிதும்

நினைக்கக்கூடாது. லேசான சூட்டுடன் பல நாட்கள் விடாமல் அடிக்கும் சுர நோய்களின் குறிகள் அகோனைட்டில் இல்லை. அகோனைட் சுரம் பொதுவாக அதிக நாட்கள் நீடித்திருக்காத கடுமைக்குணம் வாய்ந்ததாய் இருக்கிறது. விட்டுவிட்டுத் தோன்றும் முறைச் சுரத்துக்கும் அகோனைட்டுக்கும் சிறிதுகூடத் தொடர்பு கிடையாது. அகோனைட்டில் அவ்விதமான குறிகள் எதுவுமே இல்லை. முறைச்சுரம் முதல் தடவையாய்த் தோன்றும்போது உங்களை ஏமாற்ற அதில் ஏதோ ஒன்றிரண்டு குறிகள் காணப்படலாமாயினும் அச்சுரம் இரண்டாவது தடவை வந்தவுடனே அகோனைட்டை ஒதுக்கித்தள்ள வேண்டியதுதான் என்பது தெரிந்துபோகும். சில மருந்துகளில் முறைக்குணம் அல்லது அலைபோல் மீண்டும் மீண்டும் தோன்றும் குணம் இருக்கிறது. அகோனைட்டில் இல்லை. மிகக் கடுமையாய்த் தோன்றிய சுரம் ஒரே இரவில் அடங்கிப் போய்விட்டதென்றால் அது அகோனைட் சுரமாய்த்தான் இருக்கும். அப்படி இல்லையென்றால் அதற்கு நீங்கள் அகோனைட்டைத் தவறாய் உபயோகித்திருக்கிறீர்கள். அதுபற்றி நீங்கள் வருந்தத்தான்வேண்டும். ஏனென்றால், சில சமயங்களில் அகோனைட் கெடுதல் செய்யக்கூடியது. ஒரு நோயிலுள்ள எல்லாக் குறிகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். கொடுக்கப்படும் மருந்துடன் ஒற்றுமையுள்ள குறிகளுடன் ஒற்றுமை இல்லாதவைகளையும் கவனிக்க வேண்டும்.

எரிச்சலுடனும் திடீர் வீக்கத்துடனும் கூடிய கண் வேக்காடு அகோனைட்டில் இருக்கிறது; இமைகள் மிக வேகமாய் வீங்கிப்போகும். மிகவும் கஷ்டப்பட்டால் ஒழிய அவைகளைத் திறக்க முடியாது. இமையோரங்களைச் சாமணங்களால் பிடித்துத் தூக்கிப் பலவந்தமாய்த் திறந்தால் கண்களிலிருந்து சூடான நீர் சொட்டும். ஆனால் சீழ் எதுவும் இருக்காது. ஜலதோஷம் பிடித்தால் இக்குறி விரைவில் தோன்றும். சளித் தோல்களிலே வேக்காடு தோன்றும் சமயங்களில் இரத்தம் கலந்த நீர் பெருகுவது இயல்பு. திடீரென்று இரத்தக் குழாய்கள் புடைத்து வீங்கிக் கசியும். இரத்தக் குழாய்



-600 006.

களில் வெடிப்பு ஏற்பட்டு காபில்லரிகளிலிருந்து இரத்தக்கசிவு உண்டாகும்.

இதைப்போலவே காது வேதனையும் திடீரென்று தோன்றும். "காதுகளில் வெட்டுவதுபோலவும் துடிப்பதுபோலவும் கடுமையான வலிகள்." சில்லென்ற வாடைக்காற்றில் போதிய உடையில்லாமல் வெளியே சென்று வீடு திரும்பிய குழந்தை வீறிட்டுக் கதறுகிறது; அதன் கைகளைக் காதுப் பக்கம் கொண்டுபோகிறது. பகலில் வெளியில் இருந்துவிட்டு மாலையில் வீடு திரும்பியதும் நோய் தோன்றுகிறது. சுரமும் கவலையும் குழந்தை தன்னைத் தூக்கிவைத்துக்கொள்ளச் சொல்வதும். வேதனை கடுமையாய் இருக்கிறது. ஓசைகளைப் பொறுக்கமுடியாது. பாட்டுப்பாடினால் அது உடலின் ஒவ்வொரு நரம்பையும் துளைக்கிறது; செவிப்புலன் உணர்ச்சி அவ்வளவு நிட்சண்யமாகிறது. உடலின் ஒவ்வொரு பகுதியிலும் இதைப் போன்ற நரம்புகளின் உணர்ச்சி திவிரமாகிறது. நோய்க்குறிகள் எந்த இடத்தில் இருந்தாலும் அவை பலமாய்க் கடுமையாய் இருப்பதால் நோயாளிக்குக் கவலையும் வேதனையும் கோபமும் தோன்றும். "காதுகளினுள்ளே கொட்டு வலிகள், எரிச்சல், கிழிக்கும், வெட்டும், உடைக்கும் வலிகள்."

பகல் வேளையில் குளிர்காற்றில் அடிபட்டதினால் இரவில் திடீரென்று தோன்றும் ஜலதோஷத்தில் கடுமையான தலைவலியும் காணப்பட்டால் குறுகிய காலமே வேலை செய்கிற ஆனால் விரைவிலே பலனைத் தருகிற இம்மருந்து (அகோனைட்) ஏற்றதாகும். குளிரில் அடிபட்டுப் பலநாட்கள் சென்றபிறகு தோன்றும் ஜலதோஷத்தில் **கார்போ வெஜிடபிலிஸ்** உபயோகப்படும். இதே போல **ஸல்ஃபர்** தேவைப்படும் கேசுகளிலும் குளிரில் அடிபட்டுப் பல நாட்களான பிறகே ஜலதோஷம் தோன்றும். **கார்போ வெஜிடபிலிஸ்** நோயாளிக்கு உடலில் அதிகச் சூடு கண்டதால் ஜலதோஷம் ஏற்படுகிறது. அகோனைட் நோயாளியோ போதிய உடை இல்லாமல் வெளியில் சென்று, அதனாலும், தன் திடகாத்திரமான உடல் அமைப்பினாலும் நள்ளிரவில் நோய்க்கு உள்ளாகிறார்.

கொழு கொழு என்று புஷ்டியாகவும் ஆரோக்கியமாகவும் உள்ள குழந்தைகளுக்கு உண்டாகும் ஜலதோஷத்தில் பல சமயங்களில் அகோனைட் உபயோகப்படுகிறது. உடல் வெளுத்து மெலிந்துள்ள குழந்தைகளிடத்தில் உபயோகப் படுவதில்லை. மெலிந்த குழந்தைகளுக்கு ஜலதோஷம் நாட் கழித்தே தோன்றும். அவர்கள் உடல் வலிமை குறைந்திருப் பதால் அவர்களுக்கு ஏற்படும் நோய்கள் வெளியே தோன்ற இரண்டல்லது மூன்று நாட்கள் பிடிக்கும். ஒரே குடும்பத் தைச் சேர்ந்த புஷ்டியான உடலுள்ள குழந்தையொன்றையும் வெளுத்து மெலிந்த உடலுள்ள குழந்தையொன்றையும் கொண்டுவந்து இரண்டையும் பகல் நேரத்தில் வாடைக்காற் றிலே நிற்கச் செய்தால் புஷ்டியான குழந்தைக்கு அன்றிரவே தொண்டைகட்டிக்கொள்ளும். அதற்கு அகோனைட் தேவை. மற்ற குழந்தைக்கு மறுநாட்காலையில்தான் நோய்தோன்றும். அதற்கு **ஹிபார் ஸல்ஃபர்** பயன்படும்.

மூக்கிலிருந்து இரத்தப்போக்கு, தலைவலி, கவலை, பயம் ஆகியவை ஜலதோஷத்துடன் சேர்ந்திருக்கக் கூடிய குறிகள். அகோனைட் நோயாளியிடம் முதலிலேயே தென்படக்கூடிய குறிகளில் கவலையைக் காட்டும் முகத் தோற்றமாகும். அகோனைட்டின் நுமோனியா (நுரையீரல் வேக்காடு) பல சமயங்களில் நோயாளியின் முகத்தின் மூலம் தன்னை வெளி யிட்டுக்கொள்கிறது. முகத்தைப் பார்த்தால் அங்கே அதிகக் கவலை தெரிகிறது. அகோனைட்டின் மருந்துச் சோதனையில் வெளிப்பட்ட குறிகள் பலவற்றையும் முகம் காட்டுகிறது. உடம்பின் உட்புறத்தே என்னென்ன நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன என்பதை முகத் தோற்றத்தைக் கொண்டே பெரும்பாலும் அறிந்துகொள்ளலா மென்பது உங்களுக்குத் தெரியும்; முகம் முழுக் கதையையும் சொல்லிவிடுகிறது. மனித இனத்திலே ஏற்படக் கூடிய இன்ப துன்பங்களையும் வேதனைகளையும் முகத்தை ஒரு முறை பார்த்தாலே போதும். எது என்பது உடனே விளங்கிவிடும். இவ்விடத்தில் முகத்தில் கவலைக் குறியைக் காணலாம்.

"ஒரு கன்னம் சிவந்தும் மறு கன்னம் வெளுத்தும்" என்ற குறி பற்பல மருந்துகளில் காணப்படுகிறது; ஆனால்



கவலை தோய்ந்த முகத்தோற்றம், பயம், சூடு, அமைதியற்ற தன்மை, நோய் திடீர் என்று தோன்றியது, நோயாளி திட காத்திரமான உடலுள்ளவராயிருத்தல், நேற்று வறண்ட காற்று வீசியது ஆகிய மற்றுமுள்ள துணைக்குறிகளைப் பார்க் கும்போது முதல் குறியை அகோனைட்டுக்கு உரியதாக மதிக்க லாம். ஆனால் வேறு வகையான துணைக் குறிகள் காணப் பட்டால் மற்ற மருந்துகளில் ஏதோ ஒன்றுக்கு உரியதாய்க் கருதலாம். "முகத்தில் நரம்பு வலிகள், முகத்தின் இருபக்கங் களில் ஏதோ ஒன்றில் சூடான கம்பிகள் ஓடிக்கொண்டிருக்கும் உணர்ச்சி." ஒருவர் வறண்ட குளிர் காற்றில் செல்கிறார்; முகத்தில் காற்று வீசுகிறது. முகம் சுரணை குறைந்து மத மதவென்று மாறுகிறது. பிறகு வலி, கடுமையான வலி ஆரம்பிக்கிறது. கத்தியினால் வெட்டுவதைப்போல் தோன்றும் வலிகளால் அவர் கதறுகிறார்; வீறிட்டு அலறுகிறார். அகோனைட் நீக்கும். "எறும்புகள் ஊர்ந்து செல்வதுபோல வும் குடைவது போலவும் உணர்ச்சி." நரம்புகள் ஓடும் இடங் களில் எல்லாம் அகோனைட்டில் இக்குறி உண்டு. நரம்பு களில் பனிக்கட்டி நீர் ஊற்றப்படுவதைப்போன்ற உணர்ச்சி யும் அகோனைட்டில் இருக்கிறது. தொடை நரம்பு வேக் காட்டில் அந்நரம்பின்மேல் பனிக்கட்டி நீர் விழும் உணர்ச்சி. வலியுடனோ இல்லாமலோ முகத்தில் குடைவது போலவும், ஊறுவது போலவும், சுண்டுவது போலவும் இருத்தல். முகத் தில் கடுமையான சூடு. கடுமையான சுரம் இருக்கிறது. தலை யணையின் மீது இருந்த முகத்தின் பக்கத்தில் பல சமயங்க ளில் வியர்வை ஏராளமாய் இருக்கும். நோயாளி பக்கம் மாறிப்படுத்தால் வியர்த்திருந்த இடம் உடனே காய்ந்து மறு பக்கத்தில் வியர்வை தோன்றும்.

ஆகா! பல்வலிக்கு அகோனைட் எவ்வளவு சுகமான மருந்து தெரியுமா! பல்வலி வந்தால் ஒரு துண்டுப் பஞ்சில் ஒரு சொட்டு அகோனைட்டை ஊற்றிப் பல் இடுக்கில் வைத் துக்கொண்டால் போதுமென்ற விஷயம் இக்காலத்தில் வய தான பாட்டிமார்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. இதி லிருந்து பல் வலிக்கு அகோனைட் எவ்வளவு உபயோகமாய்

இருக்கிறதென்பது தெரிகிறதல்லவா? பல சமயங்களில் அது வலியிலிருந்து விடுதலை அளிக்கிறது. இம் முறையை விட அகோனைட்டை ஒரு வேளை உட்கொண்டால் மேலும் அதிக நன்மை கிடைக்கும். ஆனால் பல்வலியின் கடுமை; பழைய கதைதான். அதாவது வறண்ட குளிர்காற்றுத் தாக்கியதால் நோய் தோன்றுதல், நோயாளி நல்ல திடகாத்திரம் உள்ளவராய் இருத்தல், பற்களில் இண்டு இடுக்குகள்; கடுமையான வலி, பற்களில் வெட்டும், பாயும் வலிகள். சில சமயங்களில் இவ்வலிகள் இண்டு இடுக்கு இல்லாத நல்ல பற்களில் ஒரு வரிசை முழுவதும் இருக்கலாம். காற்றில் அடிபட்டதால் ஏற்படும் கடுமையான வலிகள். அகோனைட்டை ஒரு வேளை கொடுத்ததும் வலிகள் குறைந்து மிக வேகமாய் மறைந்துவிடுகின்றன.

நாக்கின் சுவை அறியும் சக்தியில் கோளாறுகள்; சீரணக் கோளாறுகள். தண்ணீரைத் தவிர **மற்ற எல்லாப் பொருள்களும் கசப்பாய்த் தெரிகின்றன.** அகோனைட் நோயாளி தண்ணீருக்காக எவ்வளவு ஏங்குவார் தெரியுமா? தனக்கு வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்காதோ என்று அவருக்குத் தோன்றும். எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் உடலுக்குத் தீங்கு ஏற்படுவதில்லை.

அகோனைட்டின் எல்லா நோய்களிலும் **எரிச்சல்** காணப்படுகிறது. வலிகளுடன் எரிச்சலும் சேர்ந்திருப்பதை நீங்கள் காணலாம். தலையில் எரிச்சல்; நரம்புகள் செல்லும் இடங்களிலெல்லாம் எரிச்சல், தண்டு வடத்தில் எரிச்சல், சில சமயங்களில் குறுமிளகை அறைத்துத் தடவியிருப்பதுபோல் எரிச்சல்.

**தொண்டை** வேக்காட்டில் அவ்விடத்தில் எரிச்சல், காய்ந்த உணர்ச்சி, டான்ஸிலில் சுரப்பிகள் அல்லது தொண்டை முழுவதுமே அதிகமாய்ச் சிவந்திருத்தல் முதலிய குறிகள் தென்படும்போது மிக உபயோகமுள்ள மருந்துகளில் அகோனைட்டும் ஒன்று. சில சமயங்களில் மேல் அண்ணத்தின் பின்பகுதியில் அதிக வீக்கம் காணப்படும். தொண்டையில் அதிகமான வேக்காடு இருப்பதுமட்டும் அகோனைட்டைக்



குறிக்காது. அம்மாதிரியான நோயை அகோனைட் நீக்குகிறது. தொண்டை வேக்காட்டை அகோனைட் குணம் செய்கிறது. அதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் நான் மேலே சொன்ன குறிகளைக்கொண்டு ஒரு ஹோமியோபதி வைத்தியர் அகோனைட்டுடன் மேலும் 40 அல்லது 50 மருந்துகளைச் சொல்லக் கூடும். முழு விவரம் இல்லாத நோயை அல்லவா நான் குறிப்பிட்டிருக்கிறேன். தொண்டை எவ்விதமாய் இருக்கிறதென்பதை நீங்கள் குறித்துக்கொள்கிறீர்கள். அவ்விதமான தொண்டையில் அகோனைட் தேவைப்படும் என்பதைக் குறிப்பிடுவது எது என்ற கேள்வியை ஒவ்வொரு வைத்தியரும் தன்னைத் தானே கேட்டுக்கொள்ளவேண்டும். தொண்டையைப் பார்க்காமலேயே அக்கேசுக்கு மருந்து கொடுக்க முடியாதா என்ற அடுத்த கேள்வி வரும். **அறிவுள்ள ஒரு வைத்தியருக்கு** நோயாளியைப்பற்றிய விவரத்தை எடுத்துக்காட்டும் விஷயத்தில் தொண்டையினால் அதிக உதவி கிடையாது. வேக்காடுற்ற பகுதிதான் வைத்தியருக்கு அறிவை ஊட்டவேண்டுமென்றால் கல்லீரல் வேக்காட்டை அவர் எவ்வாறு நீக்குவார்? கல்லீரலைக் காண அவரால் முடியாது. வயிற்று வேக்காட்டுக்கு எவ்விதம் அவர் மருந்து கொடுப்பார். வயிற்றையும் அவரால் பார்க்கமுடியாது. ஆகவே நோயாளியின் தன்மையை அறிவுள்ள வைத்தியருக்கு வெளிப்படுத்துவது எதுவோ அதையே நாம் ஆதாரமாய்க் கொள்ளவேண்டிய அவசியம் உண்டாகிறது. அப்போது இதைப்போன்ற விஷயங்களின் காரணம் நமக்குத் தெரியவருகிறது. அகோனைட் நோயாளியை உங்கள் அகக்கண்ணில் கண்டீர்களானால் நீங்கள் அதைக் கொடுக்கலாம். வெளிப்படையாய்க் காணக் கூடியதைப் பார்ப்பது நலமே. கல்லீரலை நீங்கள் பார்க்க முடிந்தால் பாருங்கள் என்றுதான் சொல்வேன். இருதயத்தைப் பார்க்க முடிந்தால் அதைச் சோதியுங்கள் என்றுதான் கூறுவேன்.

(தொடரும்)

# அனுபவங்கள்

(டாக்டர் திவான் ஜய் சந்த்)

— முன் மாதத் தொடர்ச்சி —

## 4. மலக்குடலில் புற்றுநோய்

1937-ம் ஆண்டு மே மாதம் 17-ம் தேதியன்று ஸ்ரீமான் வ. ரா. என்பவர் என்னிடம் ஆலோசனை பெற வந்தார். கிட்டத்தட்ட நாற்பது வயதிருக்கும். அலோபதி வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரியில் இருந்த புகழ்பெற்ற ஸர்ஜன் ஒருவர் அவருடைய நோய்க்கு மலக்குடலின் புற்று என்று பெயர் நிர்ணயம் செய்தாராம். அந்த ஸர்ஜனின் அபிப்பிராயப்படி அந்நோய்க்கு ஆபரேஷன் எதுவும் செய்வதற்கில்லை. ஏனென்றால் நோயாளிக்கு மிகுதியான பலவீனமும் சோர்வும் இருந்தன.

ஒவ்வொரு நாளும் சளியும் இரத்தமும் துர்நாற்றமும் உள்ள மலம் பல தடவைகள் வெளியாகியது. மலம் கழிக்கும் போதும் பிறகும் மலக்குடலில் கடுமையான வலி தோன்றும். பசி மிகக் குறைவு. அடிக்கடி விழிப்புடன் தூக்கம்.

17-5-1937-ல் **நைட்ரிக் ஆஸிட்** 30-ஐ நாளொன்றுக்கு இரண்டு வேளைகள் இரண்டு நாட்களுக்குக் கொடுத்தேன். மலத்துடன் வெளிப்படும் சளி, இரத்தம் ஆகியவைகளின் அளவு குறைவானதுடன் வலியும் சிறிது அடங்கியிருந்தது.

அடுத்த நான்கு நாட்களுக்கு மருந்தில்லா மாவையே (ஷுகர் ஆஃப் மில்க்) கொடுக்கப்பட்டது. இப்போது புதியதோர் குறி அதாவது அபான வாயு வெளியாகும்போது அதனுடன் சேர்ந்து சிறிது மலமும் நோயாளிக்குத் தெரியாமல் வெளிப்பட்டது. மே மாதம் 24-ந் தேதியன்று **நேட்ரம் ஸல்ஃப்** 6-x-ஐ முதலில் நான்கு மணிக்கொரு தடவையாகச் சில வேளைகளும் அதன் பிறகு அதிக இடைவெளிவிட்டுச் சில வேளைகளும் கொடுத்ததில் புதிய குறி சிறிதுதான் குணமடைந்தது. ஜூன் மாதம் 3-ம் தேதியில் **ஆலோ**



**ஸகோட்ரினு** 200 ஒரு வேளை கொடுத்தேன். பயன் எதுவும் இல்லை. ஜூன் 11-ந் தேதியன்று **நேட்ரம் ஸல்ஃப்** 200-ஐ ஒரு தடவையும் ஒரு வாரம் கழித்து மீண்டுமொரு தடவையும் கொடுத்ததில் கணிசமான நன்மை காணப்பட்டது.

மூன்று வாரங்கள் சென்ற பிறகு மறுபடியும் வலி தோன்றி மலம் கழிக்கும்போதும் பிறகும் சற்று கடுமையாய் இருந்தது. ஜூலை மாதம் 11-ந் தேதி **ஆஸிட் நைட்ரிக்** 200 கொடுத்தேன். அதனால் நோய் முழுவதும் குணமடைந்தது. அதன் பிறகு மருந்து எதுவும் தேவைப்படவில்லை.

சில நாட்களுக்கு முன் அந்நோயாளியின் நண்பர்களில் ஒருவர் வேறு ஒரு நோயாளியை என்னிடம் கொண்டுவந்து காண்பித்தார். அப்போது ஸ்ரீமான் வ. ரா.வின் நோய் என்னால் குணம் செய்யப்பட்டதை நினைவூட்டினார். அவர் சௌக்கியமாய் இருந்து வருவதாகவும் ஹோமியோபதிச் சிகிச்சைக்குப் பின் எவ்விதக் கோளாறும் இல்லையென்றும் சொன்னார்.

## 5. மலக்குடலில் புற்றுநோய்

பள்ளி ஆசிரியை. மணமாகாதவர். 47 வயது. மலத்தின்மேல் ஒரு குறிப்பிட்ட இடத்தில்மட்டும் ஒரு பொட்டு இரத்தம் காணப்பட்டது. சில நாட்களில் பொட்டளவு இருந்த இரத்தம் நீண்ட கோடுபோல் பெரிதாகியது. ஆனால் மலம் கழிக்கும்போதோ பிறகோ வலி எதுவும் இல்லை. பிறகு மலக்குடலில் ஏதோ சிறு உருண்டையொன்று இருப்பதைப்போன்ற உணர்ச்சி உண்டாகியது. அதன் பிறகு நாளொன்றுக்கு நான்கைந்து தடவைகளும் சில நாட்களில் அதற்கு மேற்பட்டும் மலம் வெளியாகத் தொடங்கியது. மலம் கழிக்கும்போது வலி உண்டாகி கழிந்து சிறிதுநேரம் வரை விடாமல் இருந்தது.

பஞ்சாப் ராஜ்யத்திலுள்ள மிகப்பெரிய ஆசுபத்திரியில் இன்-பேஷண்டாக (In-patient) அவர் சேர்க்கப்பட்டார். அந்த ஆசுபத்திரி ஸர்ஜன் நோயாளியை ஒருவார காலம்

படுக்கையில் வைத்து ஆராய்ச்சி செய்தார். மலக்குடலைச் சோதிக்கும்போது அங்கே சிறிய எலுமிச்சம்பழத்தின் அளவுக்கு ஓர் உருண்டை இருப்பதைக் கண்டார்.

அவ்வுருண்டையிலிருந்து ஒரு சிறு துண்டை நறுக்கி எடுத்துச் சோதித்ததில் புற்றுநோய் என்று தீர்மானிக்கப் பட்டது. பாட்னு (Patna) நகருக்குச் சென்று ரேடியம் சிகிச்சையோ அல்லது இங்கிலாந்துக்குச் சென்று ஆபரேஷன் சிகிச்சையோ செய்துகொள்ளலாம் என்று யோசனை கூறிய தோடு எது செய்தாலும் இரண்டு ஆண்டுகளுக்குமேல் உயிரோடு இருக்க முடியாது என்று தன் அபிப்பிராயத்தையும் அறிவித்தார் ஸர்ஜன். பாட்னுவிலிருந்த ரேடியம் ஆசுபத்திரி அதிகாரிகள் மூன்று அல்லது நான்கு வாரங்கள் சென்ற பிறகே நோயாளியைச் சேர்த்துக்கொள்ள முடியுமென்று பதில் எழுதியிருந்தனர். இந்த இடைக்காலத்தில் ஹோமியோபதி வைத்தியத்தைப் பார்க்கலாமே என்று நோயாளியின் குடும்ப நண்பரொருவர் யோசனை கூறினர். ஆகவே நோயாளி என்னிடம் கொண்டுவரப்பட்டார். தன் குறிகளைச் சொல்லும்போது நோயாளி அழ ஆரம்பித்துவிட்டார். தன்னம்பிக்கை சிறிதுகூட இல்லை. தான் பிழைக்கமாட்டோம் என்ற எண்ணம்.

29-1-1935-ல் **பல்ஸடில்லா** 30ல் நாளொன்றுக்கு 2 வேளைகள் விதம் ஆறு நாட்களுக்குக் கொடுத்தேன். மலம் வெளிப்படுவதின் எண்ணிக்கை குறைந்தது. மலம் கழிக்கும்போதும் பிறகும் காணப்பட்ட வலி சிறிது குறைந்தது. ஆனல் ஆசனவாய்க் கடுகடுப்பு. மலம் கழிக்கத் தூண்டுதல் உண்டாகுதல் முயற்சி செய்தால் மலம் வெளியாகாமை, அபானவாயு பிரியும்போது சிறிது சளிப்பொருள் கசிதல் ஆகிய குறிகள் புதிதாக முளைத்தன. இப்புதுக் குறிகளை முன்னிட்டு 4-2-1935-ல் **ஆலோ ஸகோட்ரினு** 6-x-ஐ தினமும் 3 வேளைகள் விதம் நான்கு நாட்களுக்குக் கொடுக்க நல்ல குணம் தோன்றியது. பிறகு மூன்று வாரங்களுக்கு மருந்து எதுவும் கொடுக்கப்படவில்லை. குணம் தொடர்ச்சியாய் இருந்தது. பிறகு அடி வயிற்றில் இறுக்கிப் பிடிக்கும் வலிகளுடன் மலத்துடன் சளி வெளியாவது மீண்டும் தோன்றவே



27-2-1935-ல் **மெர்குரியஸ் ஸொலுபுலிஸ்** 200-ஐ ஒரு வேளை கொடுத்தேன். பன்னிரண்டு நாட்கள் கழித்து **ஸல்ஃபர் 200** ஒரு வேளையும் அதன் பிறகு மூன்று மாதங்கள் சென்றவுடன் அம்மருந்தையே மீண்டும் ஒரு வேளையும் கொடுத்தேன். அன்று முதல் இன்றுவரை நோயாளி சுகமாய் இருந்து வருவதாக அவருடைய சகோதரியின் மூலம் சில நாட்களுக்குமுன் அறிந்தேன்.

## 6. ஸ்தனத்தில் புற்றுநோய்

டை நோயாளிக்கு ஹோமியோபதி வைத்தியத்தைப் பார்க்கலாமென்று யோசனை கூறிய நண்பர், அவருடைய தாய்க்கு ஸ்தனத்தில் புற்று என்று பெயர் நிர்ணயிக்கப் பட்ட நோயை ஹோமியோபதி குணம் செய்ததிலிருந்து, ஹோமியோபதிக்கு உற்சாகத்துடன் ஆதரவு காட்டுகிறவர்களில் ஒருவராய் மாறியவர். அவருடைய தாய் ஸ்தனத்தை வெட்டி யெடுத்துச் சிகிச்சை பெறுவதற்காக லாகூருக்கு அனுப்பப்பட்டிருந்தார். ஸ்தனத்தினுள்ளே கல்லைப்போல் கடினமாய், கிரிக்கெட்டுப் பந்தின் அளவுக்கு ஒரு கட்டி இருந்தது. ஆனல் வலி எதுவும் இல்லை. லாகூருக்கு வந்தவுடன் அப்பெண்மணிக்குச் சுரம் தோன்றியதால் ஆபரேஷன் செய்வதை ஒத்திப்போட்டனர். சுரத்துக்காக என்னிடம் சிகிச்சை பெற்றார். ஒருவார காலம் என்னிடம் சிகிச்சை பெற்று வருகையில் ஸ்தனத்திலிருந்த கட்டியின் அளவு சற்றே குறைந்ததுபோலத் தோன்றியதால் என்னையே கட்டிக்கும் சிகிச்சை செய்யக் கேட்டுக்கொண்டனர். நான் **கல்கேரியா ஃப்ளூவார்** 6-x-ஐ நாளொன்றுக்கு மூன்று வேளைகளாய்க் கொடுத்துவந்தேன். கட்டி கொஞ்சங் கொஞ்சமாய்ச் சிறுத்து வருவது நன்கு தெரிந்தது. பத்துவாரக் காலத்தில் கட்டி முழுவதும் மறைந்துபோய்விட்டது. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் சென்ற பிறகு வேறு ஏதோ ஒரு நோயினல் அப்பெண்மணி இறந்தார். சாகும் வரை ஸ்தனக் கட்டி அதன் தலையை மீண்டும் காட்டவில்லை.

## 7. கல்லீரலில் புற்றுநோய்

என் அத்தை. விதவை. 50 வயது. தான் சாகக் கிடப்பதாகவும் உடனே தன்னை வந்து பார்க்கும்படியும் அவசரச் செய்தி அனுப்பினள். அவள் வீட்டுக்குச் சென்றேன்.

கடந்த பல மாதங்களாக அவளுக்கு மஞ்சட் காமாலை இருந்து வருகிறது. அலோபதி, ஆயுர்வேதம், யூனானி இப்படிப் பல முறைகளில் சிகிச்சை செய்தும் பயன் இல்லை. கல்லீரல் மிகவும் வீங்கிப் பருத்திருந்தது. கல்லீரலின் இடப்பகுதியில் அதிக வீக்கம். பருத்த இடத்தைத் தடவிப் பார்த்தபோது அங்கு வழுவழுப்பாய் இல்லாமல் மேடும் பள்ளமுமாய் இருப்பது தெரிந்தது. இயற்கையில் சிவப்பாய் இருக்கும் அவர் உடல் இப்போது நோயினால் மிகவும் கருத்துப்போய் கறுப்பு மஞ்சட்காமாலை என்று கூறும்படி இருந்தது. மூத்திரம் கறுமை கலந்த பித்த நீர்போல் காணப்பட்டது. மலம் வெள்ளையாய் இருந்ததென்று சொன்னார்கள். கல்லீரல் புற்றுதான் அவருடைய நோயாய் இருந்திருக்கவேண்டும். பிழைக்காது என்று கைவிடப்பட்ட நிலைமை. உடல் துரும்பாய் மெலிந்துவிட்டது. நோய்க்கு முன் அவருக்குப் பருத்த உடல்.

உடனே கார்டூஸ் மரியேனஸ் தாய்த் திரவத்தை வேளைக்கு 5 சொட்டுகள் வீதம் தண்ணீரில்கலந்து நாளொன்றுக்கு 3 வேளைகள் கொடுத்தேன். ஒரு வாரத்தில் நல்ல குணம் தெரிந்தது. மூத்திரத்தின் கறுமை நிறம் சிறிது குறைந்தது. மலத்தின் வெளுப்பும் சற்று மங்கியது. பசி எடுத்தது. பிழைக்கப்போவதில்லை யென்ற எண்ணத்தினால் தோன்றிய ஏக்கம் குறைந்து உற்சாகம் உண்டாகியது. நோயிலிருந்து தப்பிவிடுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. சுமார் இரண்டு மாதங்களுக்குத் தொடர்ச்சியாக கார்டூஸ் மரியேனஸைத் தாய்த்திரவத்தில் நாளொன்றுக்கு 3 வேளைகள் வேளைக்கு 5 சொட்டுகள் வீதம் கொடுத்துவந்ததில் நோயாளியின் நிலமையில் நல்ல முன்னேற்றம் கண்டு தன் பழைய ஆரோக்கிய நிலையை அடைந்தார்.

இது நடந்து பல ஆண்டுகளுக்குப்பின் அவளுக்குக் காலரா எனப்படும் விஷபேதி நோய்தோன்றி ஹோமியோபதிச் சிகிச்சையினால் பிழைத்தாள். உடம்பு முழுவதும் குளிர்ந்த வியர்வையால் குளிப்பாட்டப்பட்டது போல் நனைந்து படுக்கையில் படுத்திருந்தாள். அப்போது வெப்பம் மிகுந்த கோடைக்காலம். ஆயினும் அவள் உடம்பைத்



158983

தொட்டுப் பார்க்கும்போ[illegible] இருந்தது. அடங்காத தாகம்; வாந்தியும் பே[illegible]விட்டபோதிலும் வாந்தி எடுக்கும் முயற்சிகள் விடாமல் துன்புறுத்திவந்தன. தன் உடம்பைப் போர்த்திவைத்துக்கொள்ள விரும்பாததுதான் மிக விசேஷமான குறியாய்த் தெரிந்தது. பருத்தித் துணிகளைக்கூடப் போர்த்தக்கூடாதென்று சொன்னாள். தனக்கு மிகவும் சூடாய் இருப்பதாகவும் ஐஸ் கலந்த தண்ணீரைத் தன் உடம்பின்மேல் ஊற்றவேண்டுமென்றும் கேட்டாள். நான் **ஸிகேல்கார்னுடத்**தை 30 வீரியத்தில் கொடுத்தேன். அதனால் உடனே குணம் தோன்றியது. சுமார் 12 மணி நேரத்துக்குள் ஆபத்தான நிலைமையிலிருந்து முற்றிலும் மீண்டுவிட்டாள்.

காலரா நோயில் **ஸிகேல் கார்னுடத்**தைக் கொண்டு நான் சிகிச்சை செய்த சமயம் இது ஒன்றுதான். அது எனக்கு ஏமாற்றத்தைத் தரவில்லை.

## ஆயுதச் சிகிச்சையே தேவை என்று கருதப்பட்டு ஹோமியோபதி மருந்துகளால் குணம் செய்யப்பட்ட நோய்கள்.

### 1. குடல் வால் வேக்காடு

**முதல் கேசு** :—என்னுடைய ஹோமியோபதி வைத்தியத் தொழிலிலே, என்னிடம் சிகிச்சை பெற வந்த முதல் குடல் வால் வேக்காட்டு நோயாளி 1923-ம் ஆண்டு மே மாதத்தில் வந்தார் என்று நினைக்கிறேன். நோயாளி, 30 வயதுக்குச் சற்று அதிகம். ஒரு ஜில்லாவின் முக்கிய நகரத்திலிருந்த ஸிவில் ஸர்ஜன் அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த குமாஸ்தா வேலை பார்த்து வருபவர். அலுவல் நேரம் முடியும் சமயத்தில் ஸிவில் ஆசுபத்திரியிலிருந்த தலைமைக் கம்பவுண்டரிடம் தனக்கு அடிவயிற்றில் வலியும் மலச்சிக்கலும் இருப்பதைக் கண்டிக்க ஏதாவது மருந்து தரும்படிக் கேட்டார். மெக்னீஷியா ஸல்ஃபேட்டை கம்பவுண்டர் நிறையக் கொடுத்துவிட்டார். இதைச் சாப்பிட்டவுடன் குமாஸ்தாவுக்கு அடிவயிற்றுவலி கடுமையாய் அதிகரித்துவிட்டது. வாந்தியும் வந்தது. அடுத்த மூன்று நாட்கள் நோயாளிக்குப் பொறுக்க

முடியாத வேதனை. எவ்வளவோ சிறப்பான சிகிச்சை செய்தும் மாறவில்லை. வலி ஏற்பட்ட ஒரு வாரத்தில் ஸிவில் ஸர்ஜன் குடல் வாலை ஆபரேஷன் செய்து வெட்டி எடுத்து விடவேண்டுமென்றார். இப்போது குடல் வாலில் சீழ்க்கண்டிருந்தது. கொட்டைப்பாக்களவு கட்டி. அவ்விடத்தைத் தொட முடியாத வலி. நோயாளியைச் சேர்ந்தவர்கள் ஆபரேஷனுக்குச் சம்மதிக்காமல் அவரை ரயில் மூலம் லாகூருக்குக் கொண்டுவந்து என்னிடம் சிகிச்சை செய்ய ஒப்புவித்தனர். அதுபோன்ற ஆபத்தான நிலைமைகளை ஹோமியோபதி முறைப்படி சிகிச்சை செய்யும் சுய அனுபவம் எனக்கு அப்போது கிடையாது. சிறுகுடலும் பெருங்குடலும் சந்திக்கும் பகுதியில் வீக்கத்துடன் கடுமையான சுரமும் இருந்தது. ஆபரேஷன் செய்யலாமா அல்லது ஹோமியோபதி மருந்து கொடுக்கலாமா, இந்த இரண்டில் எது நோயாளிக்குத் தீங்கு செய்யாமல் நன்மை தரும் என்று முடிவு செய்வது எனக்குப் பெரும் திகைப்பை உண்டாக்கியது. அச்சமயம் நோயாளி இருந்த நிலைமையில் ஹோமியோபதி மருந்துச் சிகிச்சையைவிட ஆபரேஷன் செய்வது அதிக ஆபத்தை உண்டாக்கும் என்றே எனக்குத் தோன்றியது.

நோயாளி பயந்த சுபாவமுள்ளவராகவும் அளவு மீறிய உணர்ச்சியுடையவராகவும் இருந்தார். வெப்பம் மிகுந்த காலம், அதிகச் சூடுள்ள சுரம், இவ்விரண்டையும் மீறி அவருக்குக் குளிர் உணர்ச்சி இருந்தது. 24-5-1923 அன்று **ஹிபார் ஸல்:பர் 30**-ஐ காலையும் மாலையும் ஆக இரண்டு வேளை கொடுத்தேன். மறுநாள் காலையில் **ஸல்:பர் 30**-ஐ ஒரு வேளை கொடுத்தேன். வீக்கம் குறையத் துவங்கியது. சுரமும் குறைந்து வந்து 27-ம் தேதியன்று உடல் சூடு இயற்கை அளவுக்கு வந்துவிட்டது. அன்று மலச்சிக்கலை நீக்கவும் பல வருஷங்களாய் அவருக்கு இருந்துவரும் மூல நோயினால் ஏற்பட்ட புடைத்திருந்த இரத்தக் குழாய்களைக் குணம் செய்யவும் **நக்ஸ் வாமிகா 3**-ஐப் பிற்பகலில் ஒரு வேளையும், இரவு படுத்துக்கொள்ளும்போது ஒரு வேளையும் உட்கொள்ளும்படி 27, 28 ஆகிய இரண்டு நாட்களுக்குக் கொடுத்தேன். எதிர்பார்த்த பயன் கிடைத்தது. 29-ம் தேதியன்று **ஸல்:பர் 30**-ல் 7 வேளைகளும், **நக்ஸ் வாமிகா 3**-ல்



21 வேளைகளும் மருந்து கொடுத்து ஸல்பரை 4 நாட்களுக்கொரு முறையும் நக்ஸ் வாமிகாவை இடையுள்ள 3 நாட்களில் நாளொன்றுக்கு ஒரு வேளை வீதம் இரவு படுத்துக்கொள்ளும்போதும் உட்கொள்ளச் சொன்னேன். குடல் வாலில் சீழ்ப் பிடித்ததால் தோன்றிய வீக்கத்தின் அடையாளம் சிறிதுகூட இல்லை. மலம் ஒழுங்காகவும் திருப்திகரமாகவும் வெளியாகியது. வலியோ, இரத்தப்போக்கைத் தூண்டும் மூலங்களோ இல்லை.

பல ஆண்டுகள் கழித்து ஷை நோயாளிக்கு ஆசனவாய்க்கு அருகில் ஒரு சீழ்க்கட்டி உண்டாகி உடைந்து ஆசனப் பவுத்திரமாய் மாறியது. அதற்கும் ஹோமியோபதி மருந்துகளாலேயே சிகிச்சை செய்து நல்ல குணம் ஏற்பட்டது.

அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்துவருகிறார். ஹோமியோபதியைப் படித்துச் சிறிது விஷயம் கற்றுக் கொண்டிருக்கிறார். நோய்வாய்ப்படும் சமயங்களில் தனக்கும் மற்றவர்களுக்கும் சிறு ஹோமியோபதி மாத்திரைகளின் துணைகொண்டு உதவிசெய்து வருகிறார். நான்கு மாதங்களுக்கு முன் ஒரு நோயாளியை என்னிடம் கொண்டுவந்தார். தான் சுகமாய் இருந்து வருவதாகத் தெரிவித்தார்.

அடுத்த இதழில்

**குடல் வால் வேக்காடு—இரண்டாவது கேசு.**

---

## வைத்தியக் கருவிகள்

ஜெர்மன், சைனா, இந்தியன் ஸ்டெதாஸ் கோப்புகள், ஜெர்மன், ஜப்பான், இங்கிலீஷ் தர்மாமீட்டர்கள், இஞ்சக்ஷன் சிரஞ்சுகள், ஊசிகள் மற்றுமுள்ள வைத்தியக் கருவிகள் ஆகியவைகளுக்கு எங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள். "குறைந்த லாபம்! நிறைந்த விற்பனை" என்பது எங்கள் நெடு நாளையக் கொள்கை.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**
**மதராஸ்-28.**

கிளை :
**9, செம்புதாஸ் தெரு,**
**மதராஸ்-1.**

# செய்திகளும், அபிப்பிராயங்களும்.

**முத்து வைத்தியசாலை :** காஞ்சிபுரம்-அரக்கோணம் ரோடில் படுநெல்லி கிராமத்தில் ஜனவரி மாதம் 17-ம் தேதி டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் "முத்து வைத்தியசாலை"யைத் திறந்து வைத்தார்கள். அவ் விழாவிற்கு 200 பேர்களுக்கு அதிகமான நபர்கள் குழுமியிருந்தனர். நமது மாணவர் டாக்டர் டி. முத்து அவர்களால் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மனைக்கு முன்பாக தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் கிராம அதிகாரிகளும், அப்பிராந்திய டாக்டர்களும் கூடியிருந்தனர். சிற்றுண்டிக்குப் பிறகு டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் ஹோமியோபதியின் வளர்ச்சியையும், சிறப்பையும் பற்றிப் பேசியபின், டாக்டர் முத்துவின் மேன்மையான மனப் பான்மையைபற்றியும் பேசி வைத்தியசாலையைத் திறந்து வைத்தார். பிறகு, டாக்டர் ஏ, முனிரத்தினம் டாக்டர் ஹானிமனின் படத்தைத் திறந்து வைத்தார். டாக்டர் பா. சிற்சபை அகஸ்தியர் படத்தையும் திறந்து வைத்தார். அதன் பிறகு பல பேச்சாளர்கள் ஆசி கூற விழா இனிது முடிந்தது.

**விழுப்புரம் :** நமது மாணவர் டாக்டர் எம். பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில் விழுப்புரத்திலிருந்தும், அதற்கு அடுத்துள்ள கிராமங்களிலிருந்தும் ஹோமியோபதியர்கள் விழுப்புரம் "நியூ வாசவி விஹார்" ஹாலில் ஜனவரி 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குக் கூடி இருந்தனர். டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் ஆர்கனுனைப் பற்றி ஓர் விரிவுரை ஆற்றினர்கள். அதன் பிறகு தற்கால ஹோமியோபதியின் நிலைமையைப் பற்றியும் பேசி, ஹோமியோபதியர்கள் ஆங்காங்கே சங்கங்கள் கூட்டிந் தங்கள் கலை வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்தினர்கள். அதன் பிறகு விழுப்புரத்தில் ஒரு ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம் செயல்படும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.



**புதுப் பதிவுக் கடிதம் :** மாவட்டக் கலெக்டர்கள் ஹோமியோபதியர்களுக்குப் புதுப் பதிவுக் கடிதம் வழங்கும் போது அக்கடிதத்தில் பழைய பதிவுக்கடிதத்தின் எண், தேதி முதலிய விசேஷக் குறிப்புக்களை அவசியம் குறிக்க வேண்டும் என்று ஹோமியோபதி ஹௌஸ் கவர்னிங் டைரெக்டர் ரெவின்யூ போர்டாருக்குச் சென்ற நவம்பர் மாதம் 24-ம் தேதி எழுதியிருந்தார். போர்டாரின் ஜனவரி 11-ம் தேதி 'L-DIS.8833,61 என் இட்டக் கடிதத்தில் மாவட்டக் கலெக்டர்கள் ஹோமியோபதி ஹௌஸ் கேட்டுக்கொண்ட வண்ணமே புதிய பதிவுக் கடிதத்தை வழங்குமாறு உத்தரவிட்டிருக்கிருர்கள்.

**பிள்ளைப்பேறும், இரத்த அமுக்கமும் :** சர். ஜார்ஜ் பிக்கரிங் என்ற ஆங்கில டாக்டர் கூறுகிருர் :—" ஆண் ஆயினும் சரி, பெண் ஆயினும் சரி, அதிகம் பிள்ளைப்பேறுடையவர்களுக்கு இரத்த அமுக்கம் குறைவாய் இருக்கிறது".

இரத்த அமுக்கத்தைக் குறைக்க இவ்வளவு விலையுயர்ந்த மருந்தா !

**புலால் :** அல்லியம் ஸடீவம் என்பது பிரயோனியா வர்க்கத்தைச் சேர்ந்தது. லைகபோடியம், நக்ஸ் வாமிகா, காலோஸிந்திஸ், டிஜிடாலிஸ், இக்னேஷியா ஆகிய இவ்வைந்தும் இந்த வர்க்கத்தையே சேர்ந்தவை. இவைகள் எல்லாம் மரக்கறி உண்பவர்களைச் காட்டிலும் புலால் உண்பவர்களுக்கு விசேஷமாய் வேலை செய்கிறதாம்.

**புதிய லாபரெட்டரி :** 15-1-62, திங்கள்கிழமை மாலை 3 மணிக்கு, சென்னை மின்சார இலாகா அமைச்சர் கனம் வி. ராமையா அவர்கள், திருவாரூர் ஹானிமன் ஹோமியோ இன்ஸ்டிட்யூட் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தார். இவ்விழாவிற்கு விஜயபுரம் கே. டி. ஆர். பெர்பியூம்ஸ் உரிமையாளர் கே. டி. ஆர். கோபாலகிருஷ்ணராஜு அவர்கள் தலைமை வகித்தார்கள். வைத்திய முறையில் நோயாளிக்கு விரைவில், சிறந்த முறையில் பிணி நீக்கக்கூடிய எந்த முறையையும் சர்க்கார் ஆதரிப்பார்கள் என்றும், ஹோமியோபதியர்களுக்கு ஏற்பட்டுள்ள

தாகக் கூறப்படும் சில கஷ்டங்களை நீக்கி, அவர்கள் தொழில் சிரமமின்றி நடத்த சர்க்கார் உதவி செய்யத் தயங்கமாட்டார்கள் என்றும் கனம் மந்திரி அவர்கள் கூறினர்.

**ஈரோடு :** 7-1-62-ம் தேதி மாலை 4 மணிக்கு ஈரோடு ஹோமியோபதிக் மெடிகல் சங்கத்தின் உபதலைவர் டாக்டர் ஜே. டி. ராஜாராம் அவர்கள் தலைமையில் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் டாக்டர் எஸ். பி. முருகேசன் அவர்கள் லாக்கஸிஸ் என்னும் மருந்துபற்றியும், சங்கக் காரியதரிசி, டாக்டர் வி. எம். சுப்ரமண்யம் அவர்கள் குடல்சறிவு (ஹெர்னியா) உண்டாகக் காரணங்கள்பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர்கள்.

**தொப்பம்பட்டி :** 17-12-61-ம் தேதி தொப்பம்பட்டி வட்டார பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் முதல் மாதாந்திரக் கூட்டம் பூலாம்பட்டியில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பின் அதில் கீழ் கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர்: டாக்டர் ஆர். செல்வரங்கையர் ; காரியதரிசி: டாக்டர் கே. சி. ராமசாமி ; பொக்கிஷதாரர்: டாக்டர் கே. சுப்பிரமண்யம்.

7-1-62-ம் தேதி பிற்பகல் 1 மணிக்கு, தொப்பம்பட்டி வட்டார பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கக் கூட்டம் பொட்டம்பட்டியில் அவ்வூர் பிரமுகர் திரு. க. கருப்பண்ணக் கவுண்டர் அவர்கள் தலைமையில் கூடியது.

டாக்டர் ஹானிமான் அவர்களின் உருவப்படத்தை டாக்டர் கே. ஏ. ஐயா அவர்கள் திறந்துவைக்கயில் ஹோமியோபதியின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்கினர். பின்னர் பொட்டம்பட்டி டாக்டர் கே. கருப்பண்ணாச்சாரியார், டாக்டர் ஆர். செல்வரங்கையர், டாக்டர் கே. சி. ராமசாமி, டாக்டர் என். முகம்மது சாயபு முதலியவர்கள் டாக்டர்கள் கடமை என்பதுபற்றிப் பேசினர்கள். பொருளூர் டாக்டர் கே. சுப்பிரமணியம், டாக்டர் ஏ. கந்தசாமி ஆகியவர்களும் பேசினர்கள்.



**புதிய ஆஸ்பத்திரிகள் :** 1. சிதம்பரம் தாலூகா கொத்தட்டை கிராமத்தில் "விஜயா" என்ற பெயரில் ஒரு வைத்திய சாலையை நமது மாணவர் டாக்டர் வி. கலியப் பெருமாள், 8-2-62-ம் தேதியன்று திறந்திருக்கிறார்.

2. நமது மாணவர், டாக்டர் டி. வி. அமிர்தலிங்கம், திருப்போரூர் கிழண்டை மாட வீதியில் ஸ்ரீ முருகன் ஹோமியோபதி வைத்தியசாலை என்ற பெயரில் புதிய ஆஸ்பத்திரியைத் திறந்து நல்ல முறையில் தொழில் நடத்தி வருகிறார்.

3. 26-1-62 வெள்ளியன்று, பூட்டுத்தாக்கு டாக்டர் மின்னல் கிழார் அவர்களின் "மின்னல் மருத்துவ மனை" கிளையொன்று நாராயணபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஷை ஆஸ்பத்திரிகள் மிகவும் நல்ல முறையில் வளர எங்கள் அன்பு கலந்த ஆசிகள்.

**திருமணம் :** எங்கள் மாணவர், ஸ்ரீ வி. லக்ஷ்மீபதி அவர்களுக்கும், திரு. சி. கே. குருசாமி நாயுடு அவர்களின் சகோதரி ஸ்ரீமதி மீனாட்சிக்கும் சென்னை கோடம்பாக்கம் பாண்டுரங்கர் கோயிலில் 26-1-62 அன்று திருமணம் நடந்தது. மணமக்கள் சீரும், சிறப்புடனும் நீடுழி வாழ ஆசீர்வதிக்கிறோம்.

**தென் சென்னை :** இம்மாதம் 4-ம் தேதி தென் சென்னை ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டத்தில் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் ஆர்கனனைப் பற்றிய தன் நான்காவது சொற்பொழிவை ஆற்றினர். அதன்பிறகு, விவாத அரங்கு நடந்தேறியது.

அடுத்த மாதாந்திரக் கூட்டம் மார்ச்சு மாதம் 4-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

## நமது தயாரிப்புகள்

**டாக்டர் எஸ். கல்யாணராமன், இளங்குடி, அம்மையப்பன்.**

தங்கள் மருந்தை உபயோகித்து மூன்று இஞ்சக்ஷன்கள் செய்யவேண்டுமென்று சொன்னவர்களுக்கே ஒரே இஞ்சக்ஷனில் தங்கள் ஸ்பெஷல் மருந்து வேலை செய்தது கண்டு ஆச்சரியப்பட்டேன். இன்னும் பல வியாதிகளுக்குத் தகுந்த முறையில் உங்கள் இஞ்சக்ஷன் டியூபுகள் வாங்க விரும்புகிறேன்.

**டாக்டர் ஈ. கலைமணி, வண்டுராயன்பேட்டை, புவனகிரி வழி.**

தங்கள் தயாரிப்பான இஞ்சக்ஷன் மருந்துகளைக் கடந்த இரண்டு வாரங்களாக என் நோயாளிக்குக் கொடுத்து வருகின்றேன். அவை அற்புதமாகப் பலன் அளிப்பதோடு எந்த விதமான வலியும் இல்லாமல் நல்ல முறையில் வேலை செய்கின்றன என்று என் மனப்பூர்வமாய் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் என். இராமலிங்கம், தாராபுரம்.**

தங்கள் ஹோமியோபதி மருந்துகள் மிக அற்புதமாக வேலை செய்கின்றன. காச வியாதியில் பத்து இஞ்சக்ஷன்களில் வியாதி குணம் அடைந்துள்ளது.

**டாக்டர் என். எஸ். சபாஸ்தியன் பீரிஸ், மேல ஷண்முகபுரம், தூத்துக்குடி.**

ஆண்டவனருளால் 13-11-61-ல் ஆசுபத்திரி திறந்தேன். தங்களின் திரவ மருந்துகளும், ஊசி மருந்துகளும் 100-க்கு 100 வெற்றிபெற்று ஒவ்வொரு வியாதிகளையும் நன்றாகக் கண்டித்து சுகம் கொடுக்கின்றன. டைபாய்டு. வயிற்று உப்பிசம், வாதம், வாந்தி, தலைசுற்று இவ்வியாதிகள் நன்றாகக் குணப்படுகின்றன.

## உங்களுக்குத் தெரிந்திருப்பவை

| | | |
|---|---|---|
| காலங்களில் சிறந்தது | : | வசந்தம் |
| கலைகளில் சிறந்தது | : | ஓவியம் |
| மலர்களில் சிறந்தது | : | மல்லிகை |
| கனிகளில் சிறந்தது | : | மாங்கனி |

**உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டியது.**

ஹோமியோபதி நூல்களில் சிறந்தது :

**மாஸ்டர்-கீ.**

தமிழ் நாட்டிலுள்ள தலை சிறந்த
ஹோமியோபதியர்களின்
அபிப்பிராயம் இது.
வெறும் விளம்பரமல்ல.

★

மாஸ்டர்-கீ மெடீரியா மெடிகா டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்களால் தமிழில் எழுதப்பட்டது. 1144 பக்கங்கள் விலை ரூ. 20/- தபால் செலவு ரூ. 2/- தனி. வி. பி. கிடையாது.

**தி ஹோமியோபதி ஹௌஸ்.**

| | |
|---|---|
| "பால நிலையம்" | கிளை : |
| 77, ராமகிருஷ்ண மடம் ரோடு, | 9. செம்புதாஸ் தெரு, |
| **மதருஸ்—28.** | **மதருஸ்—1.** |

Reg. No. M. 6555 February 15, 1962.


# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்பச் சிகிச்சை செய்வோரும், ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும், அதிக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விவரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

" பால நிலையம் " கிளை :

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.

9, செம்புதாஸ் தெரு, சென்னை-1.


Edited and Published by Dr. V. S. Subramaniam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1

806
1.62

நோயிலா வாழ்வே
குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

மார்ச்
1962

38
காசுகள்

## உங்களுக்குத் தெரிந்திருப்பவை:

| | | |
|---|---|---|
| காலங்களில் சிறந்தது | : | வசந்தம் |
| கலைகளில் சிறந்தது | : | ஓவியம் |
| மலர்களில் சிறந்தது | : | மல்லிகை |
| கனிகளில் சிறந்தது | : | மாங்கனி |

உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டியது.

ஹோமியோபதி நூல்களில் சிறந்தது :

**மாஸ்டர்-கீ.**

தமிழ் நாட்டிலுள்ள தலை சிறந்த

ஹோமியோபதியர்களின்

அபிப்பிராயம் இது.

வெறும் விளம்பரமல்ல.

★

மாஸ்டர்-கீ மெடீரியா மெடிகா டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்களால் தமிழில் எழுதப்பட்டது. 1144 பக்கங்கள் விலை ரூ. 20/- தபால் செலவு ரூ. 2/- தனி. வி. பி. கிடையாது.

தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

மதராஸ்-28.

For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratory Only.

# ஹோமியோபதி மித்திரன்

நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 9 மார்ச் 1962 இதழ் 8

பொருள் அடக்கம் — பக்கம்

1. சிமைப் பெருச்சாளிகளா நாம்? .... 3
2. தாய்மையும் ஹோமியோபதியும் III .... 7
3. அகோனைடம் நாபிலஸ் .... 12
4. அனுபவங்கள் .... 19
5. மனிதனின் குடலில் வாழும் பூச்சிகள் .... 27

பதினொருவது

## நேர்முக வகுப்பு

ஆரம்பத் தேதி 1-5-1962

கட்டணம் ரூ. 55/-

முழு விபரங்களுக்கு எழுதவும் :

தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.

## PRESS & REGISTRATION OF BOOKS ACT

### REGISTRATION OF NEWSPAPERS (CENTRAL) RULES, 1956

FORM IV (See Rule 8)

**Statement about ownership and other particulars about Newspaper HOMOEOPATHY MITHIRAN**

1. Place of Publication .... 77, Ramakrishna Mutt Road, Madras-28
2. Periodicity of its Publication ... Monthly
3. Printer's name .... V. Kuppuswamy Chetty, Bharathamatha Press
   Nationality .... Indian
   Address .... 39, Anderson St., Madras-1
4. Publisher's Name .... Dr. V. S. Subramaniam
   Nationality .... Indian
   Address ... 77, Ramakrishna Mutt Road, Madras-28
5. Editor's Name .... Dr. V. S. Subramaniam
   Nationality .... Indian
   Address ... 77, Ramakrishna Mutt Road, Madras-28
6. Names & Addresses of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. } Dr. V. S. Subramaniam (Sole Owner)

I, Dr. V. S. Subramaniam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) V. S. SUBRAMANIAM.

Dated 15—3—62. *Signature of Publisher.*

158983

## சீமைப் பெருச்சாளிகளா நாம்?

சமீபத்திலே, ஆங்கிலேயர்களின் நாடாகிய இங்கிலாந்திலே பெரியம்மை என்று அழைக்கப்படும் வைசூரி நோய் ஒரு சிலரைத் தாக்கியதால் அங்கு பெரும் பீதியும் பரபரப்பும் உண்டாகியது. அந்நோய் தோன்றுவதற்குப் பாகிஸ்தானிலிருந்து அங்கு குடியேற்றம் செய்த பாகிஸ்தான் நாட்டினரே காரணமென்று கருதப்பட்டு அவர்கள் மீது மக்களின் ஆத்திரம் திரும்பியது. ஆனால் இக் குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் உண்மை என்பது ஒருவருக்குமே தெரியாது. ஆயினும் இதைத் தொடர்ந்து பழிக்குப்பழி வாங்குவதைப் போல இங்கிலாந்து நாட்டவர்கள் நம்மீது விநோதமான பகையிலே வஞ்சம் தீர்த்துக் கொள்ள முனைந்து விடுவார்களென்று சிறிதும் சிந்திக்க வில்லை நாம்.

இங்கிலாந்தில் வைசூரி தோன்றிய உடனே அங்குள்ள மருந்துத் தயாரிப்பு கூடங்கள் கண் இமைக்கும் நேரத்துக்குள் வைசூரியை அடக்கும் குணமுள்ள **காம்பவுண்டு 33** (Compound 33) எனப் பெயருள்ள மருந்தொன்றைக் கண்டுபிடித்து விட்டதாக அறிவித்தனர். அம்மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்து பார்த்ததில் இதுவரை ஏற்பட்டுள்ள பயன்களைக் கண்டு ஆங்கில விஞ்ஞானிகளும் செய்தித் தாள்களும் திருப்தி அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அம்மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்யப்பட்ட பெரியம்மைக் கேசுகளின் எண்ணிக்கை மொத்தம் 13 தான். சிகிச்சை எவ்வளவு தூரம் வெற்றிகரமாய் இருந்தது என்ற விவரம் நமக்கு அறிவிக்கப் படவில்லை. பெரியம்மை கண்ட பிராணிகளுக்கு அம்மருந்தைக் கொடுத்ததில் வெற்றி காணப்பட்டது என்று உறுதி கூறப் படுகிறது.

மருந்தைக் கண்டு பிடித்து அதை முழுவதும் சோதித்துப் பார்ப்பதற்குள் இங்கிலாந்திலே வைசூரி நோய் மறையத் துவங்கி விட்டது. ஆனால் காம்பவுண்டு 33-ஐக் கண்டு பிடித்த வெல்கம் **பௌண்டேஷன்** (Wellcome Foundation) அதை

ஏராளமாய் உற்பத்தி செய்து விட்டனர். ஆகவே அவர்களுக்கும் மருந்தை என்ன செய்வது என்ற கவலை தோன்றி விட்டது.

புது டில்லியில் பிப்ரவரி 6-ம் தேதியிட்டு வெளியிடப்பட்ட பத்திரிகை செய்தி ஒன்றைப் பார்வையிட்ட போது நம் கண்களையே நம்மால் நம்ப முடியாமல் போய்விட்டது. அச் செய்தியில் வெல்கம் பௌண்டேஷனுல் தயாரிக்கப்பட்ட காம்பவுண்டு 33 என்ற புது மருந்து நம் நாட்டிலும் பாகிஸ்தானிலும் உள்ள மக்களிடம் சோதிக்கப்பட இருக்கிறதாம். அச்சோதனையில் இந்நாட்டிலுள்ள வைத்தியத் தொழில் நிபுணர்கள் ஒத்துழைக்கின்றனராம். மேலைநாடுகளில் உள்ளவர்களுக்குக் கீழ் நாட்டிலுள்ள மக்களின் உயிர்கள் மட்டமானவை என்ற அபிப்பிராயம் எப்போதுமே இருந்து வரத்தான் செய்கிறது. ஆயினும் வைத்தியத்துறைவிஞ்ஞானிகளும் அவ்விதமே மனித உயிர்களைத் துச்சமாக நினைப்பதை இது வரை நாம் பார்த்ததில்லை. விஞ்ஞானம் பணத்துக்கு பணியும் போது இவ்விதமான கேவலமான விளைவுகள் உண்டாகுமென்று தெரிகிறது. அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட மருந்தை இந்நாட்டு மக்களிடத்தில் விஷப் பரீக்ஷை செய்ய வேண்டிய நெருக்கடி எதுவும் தற்சமயம் இல்லையே!

அலோபதி மருந்துத் தயாரிப்புச் சாலைகளிலே புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் மருந்துகள் ஒவ்வொன்றையும் முதலில் சீமைப் பெருச்சாளிகளுக்கே கொடுத்துச் சோதனை செய்வார்கள். ஆனுல் காம்பவுண்டு 33-ஐ நம் நாட்டு மக்களிடமே சோதனை செய்து பார்க்கப் போகின்றனர். நம் நாட்டு மக்கள் சீமைப் பெருச்சாளிகளுக்கு ஈடாக மதிக்கப்படுகின்றனரா!

மேற்படி சோதனைகள் கூடிய வரையில் நம் தமிழ் நாட்டிலும் நடத்தப்படும் என்ற மற்ருெரு அறிக்கையும் சமீபத்தில் படித்தோம். இந்திய அரசாங்கத்தின் முன் அனுமதியில்லாமல் இப்பத்திரிகை செய்திகள் வெளியாக முடியாது. மேல் நாட்டினரின் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுப் பதினைந்து ஆண்டுகள் கழிந்த பிறகும் இந்திய அரசாங்கத்தை நடத்துவோர் சுயமாய்ச் சிந்திக்கும் ஆற்றலை இழந்து மேல் நாட்டி-



னர் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அதன்படியே நடந்து வருவது மிகவும் பரிதாபமாய் இருக்கிறது.

சென்ற இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன் அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்நாட்டு மக்களிடம் பி. ஸி. ஜி. என்ற மருந்தைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று செயலில் இறங்கியபோது அதற்குப் பலமான எதிர்ப்பு உண்டாகியது. அம்மருந்தின் நன்மை பற்றி அதைக் கண்டு பிடித்த நாட்டிலேயே குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்நாட்டில் அதை மக்களிடம் சோதிப்பது அபாயமானது, ஆட்சேபகரமானது என்று எதிர்ப்பு ஏற்பட்டது. அதற்குள் இந்தப் புது மருந்துக்கும் சீமைப் பெருச்சாளிகளாய்ப் பயன்பட நம் நாட்டு மக்கள் தான் அகப்பட்டார்களா?

---

## பதினொருவது
# நேர்முக வகுப்பு

வருகிற மே மாதம் முதல் தேதி ஆரம்பமாகிறது. வகுப்பில் சேர விருப்பம் உள்ளவர்கள் பிரவேசக் கட்டணம் சம்பளம், சர்டிபிகேட் ஆகிய எல்லா இனங்களுக்குமாக ரூ. 55/- ஏப்ரல் மாதம் 20-ம் தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். மொத்தம் அறுபது (60) மாணவர்களுக்கே இடம் இருப்பதால் கடைசித் தேதி வரை காத்திருக்காமல் முன்னதாகவே சேருவது நலம். இவ்வகுப்பைப் பற்றிய முழு விவரங்கள், விண்ணப்பப் பாரம் ஆகியவைகளைக் கீழுள்ள விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

நேர்முக வகுப்பு இலாகா

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**

**சென்னை-28.**

---

தென் சென்னை

## ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

"பால நிலையம்", சென்னை-28.

இச்சங்கத்தின் அடுத்த மாதாந்திரக் கூட்டம் 1962, ஏப்ரல் மாதம் 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4 மணிக்கு "பால நிலையம்" ஹாலில் நடத்தப்படும்.

அன்று டாக்டர் ஹானிமனின் பிறந்த நாள் வைபவம் நமது தலைவர் டாக்டர் V. S ஸுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் கொண்டாடப் படும்.

ஹோமியோபதி தந்தையின் பிறந்த நாள் வைபவத்திற்கு ஹோமியோபதியர்கள் அனைவரும் தவறாமல் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

டி. ஆர். வி. ராமன்,

காரியதரிசி.


## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகள்.
* ஸினரேரியா மாரிடிமா கண் துளி.
* அல்பால்பா டானிக்.
* டயகார்டு இருதய டானிக் ஆகியவைகள்

எங்களிடம் கிடைக்கும்:

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

மதறாஸ்-28.


# "தாய்மையும் ஹோமியோபதியும்"—III

Dr. V. S. ஸுப்ரமண்யம்.

இதுவரை தாறுமாறாக இருந்த கரு அணுக்கூட்டமானது தோல், மயிர், நகம் ஆகியவை ஒரு வரிசையிலும், தசை, ரத்தக் குழல்கள், மூத்திரக்கோளங்கள் முதலியன ஒரு வரிசையிலும் அன்னக்குழல், நுரையீரல் முதலியன ஒரு வரிசையிலுமாக உருவாகின்றன. இதே நேரத்தில் முதுகுத் தண்டும் உருவாகத் தொடங்கிவிடுகிறது. இப்போது ஒரு பகுதி பெருத்தும் ஒரு பகுதி சிறுத்தும் காணப்படும்.

மூன்றாவது வாரத்தில் கருவின் தடித்த பகுதி தலையாக மாறி அதிலே மூளை, கண், காது போன்ற உறுப்புகள் தோன்றுகின்றன.

நான்காவது வாரத்தில் வாய் அன்னக்குழல், மூத்திரக் கோளங்கள் முதலியன உண்டாகின்றன. இப்போது இருதயத் துடிப்பும் தொடங்கிவிடுகிறது. நான்காவது வாரக் கடைசியில் ஒரு அங்குலத்தில் ஆறிலொரு பங்கு நீளமுள்ள கரு ஒரு பல்லியைப் போன்று தோற்றமளிக்கும்.

ஐந்தாவது வாரத்தில் கால் அங்குலமாக வளர்ந்து முதுகெலும்பு, மூக்கு, கைகள், கால்கள் முதலிய உறுப்புகள் தோன்றுகின்றன.

ஆறாவது வாரம் அரை அங்குலம் வளர்ந்து கல்லீரல் தோன்றி வயிறு உப்பிக்கொள்ளும்.

வளரும் கருவானது தனக்கென ஒரு பையை உருவாக்கிக்கொள்ளுகிறது. இது பனிக்குடம் எனப்படும். உருவாகும் கரு உடைந்து விடாமலிருக்கும் பொருட்டு இந்தப் பையில் துல்லிய நீர் நிறைந்திருக்கும். இந்த நீரிலே நீந்தியவாறு கரு வளருகிறது.

மூன்றாவது மாதத்திலே தலை பெரிதாகிவிடும். அப்போது மூன்றரை அங்குல நீளமும் ஒரு அவுன்ஸ் எடையுமிருக்கும்.

நான்காவது மாதத்திலே ஆறே முக்காலே அரைக்கால் அங்குல நீளமும் இரண்டு அவுன்ஸ் எடையுமிருக்கும்.

ஐந்தாவது மாதம் கரு அசையத் தொடங்குகிறது. இதனைக் **கரு அசைவு** எனப்படுகிறது. இப்போது பத்தரை அங்குல நீளமும் எட்டு அவுன்ஸ் எடையுமிருக்கும்.

ஆறாவது மாதத்திலே இமை, புருவம் ஆகியவைகளைப் பெற்று பதினான்கு அங்குல நீளமாக வளர்ந்து ஒன்றரைப் பவுண்டு எடையாக மாறிவிடுகிறது.

ஏழாவது மாதத்திலே பதினாரேகால் அங்குல நீளமும் இரண்டரைப் பவுண்டு எடையுமாகக் குழந்தை வளர்ந்துவிடும். இதுவரை தொப்புள்கொடியின் மூலம் தாயின் ரத்தத்தை உறிஞ்சி உட்கொண்டு வளர்ந்த குழந்தையின் குடலில் மெக்கோனியம் எனப்படும் கட்டுமலம் தேங்குகிறது.

எட்டாவது மாதம் பதினாரேகாலே அரைக்காலங்குல நீளமும், மூன்றரைப் பவுண்டு எடையுமிருக்கும்.

ஒன்பதாவது மாதம் பதினேழேகாலங்குல நீளமும் ஐந்தரைப் பவுண்டு எடையுமிருக்கும்.

பத்தாவது மாதம் இருபது அங்குல நிளமும் ஆறரை அல்லது ஏழரைப் பவுண்டு எடையுமாக வளர்ந்து கருப்பையிலிருந்து வெளியுலகைக் காண விழைகிறது. கரு பூரண வளர்ச்சி அடைந்தவுடனே கருப்பையின் தசைகள் சுருங்கி விரியத் தொடங்குகின்றன. இந்த இயக்கத்தால் உண்டாகும் வலியினூடே கருப்பாதை திறந்து குழந்தை வெளிப்படுகிறது.

## 5. அறிகுறிகள்

இன்பகரமான இல்வாழ்வினிடையிலே மகிழ்ச்சி தரும் மற்றொரு செய்தியென மங்கை நல்லாள் கூற மணவாளன் பூரிக்கக் காரணமாயிருப்பது மாதவிடாய் நிறுத்தமாகும்.



கருவுற்றிருப்பதை அறிவிக்கும் முதற்குறி மாதவிடாய் நிறுத்தமே என்றாலும் இதனைக் கொண்டே கருவுற்றுவிட்டதாகத் தீர்மானிக்க இயலாது. எதிர்பாராத உணர்ச்சிக்கு ஆட்பட்டாலும், மாறுபட்ட சூழ்நிலையாலும், தட்ப வெப்ப நிலையிலே ஏற்படும் அதிக மாறுதலாலும் உடற் கூறிலே ஏற்பட்டுவிட்ட கோளாறாலும் பிறப்பு உறுப்புகளிலே ஏற்படும் அசாதாரண நிகழ்ச்சிகளாலும் மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம். எனினும் ஒழுங்காக மாதவிடாய் இருந்து வந்து குறிப்பிட்ட தேதியிலே மாதவிடாய் நின்றுவிட்டால் இதுவே கருவுற்ற அறிகுறியின் முதற்படியாகும்.

ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையோருக்கு கருவுற்ற நான்கைந்து வாரங்களில் வாந்தி, மயக்கம், தலை சுற்றுதல் போன்ற கோளாறுகள் தோன்றும். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது தொடங்கும் இந்தக் கோளாறு னது வெய்யில் ஏற ஏறச் சரியாகிவிடும். நஞ்சுக்கொடியில் சுரக்கும் ஒருவித நீர் மூளையைத் தாக்குவதுதான் இக் கோளாறுகளுக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

முன்பு இருந்ததைவிட கருத்தரித்த காலத்திலே உமிழ் நீர் அதிகம் சுரந்து கொண்டிருக்கும். உப்பு, புளி, காரம் ஆகிய சுவைகளின் மீது அதி விருப்பம் ஏற்படும். உடம்பிலே போதுமான அளவு உப்புச் சத்து இல்லாததே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது. இப்போது தான் மசக்கை எனப்படும் விபரீத ஆசை தோன்றி நினைத்த பொருள்களையெல்லாம் விரும்பித்தின்னும் உணர்வைப்பெறுவார்கள். ஒரு சிலர் செங்கல், களிமண், சாம்பல் முதலியவற்றைக் கூடத் தின்னத் தொடங்கி விடுவார்கள். பெரும்பாலும் புளிப்புள்ள பழங்கள் மீது ஆசை உண்டாகும்.

மூத்திரக் கோளங்களைக் கருப்பை அழுத்துவதால் முன்னை விட அதிகமாக மூத்திரம் சுரக்கும். அதனால் அடிக்கடி மூத்திரம் கழிப்பார்கள். கருப்பை வளர்ந்து மேலே எழும்பி விட்டால் இப்படி அடிக்கடி மூத்திரம் சுரக்காது. மார்பகம்

பருத்துக் கனத்து காம்பு கருத்து அகன்று அதன் மீது சிறு சிறு குருக்கள் தோன்றும். அந்த இடத்தில் கைபட்டால் வலிக்கும். மூன்ருவது மாதத்திலேயே மார்பு காம்பை அழுத்திஞல் வெளிரிய மஞ்சள் நிறத்திலே கொலஸ்டரம் எனப்படும் நிலையிலுள்ள பால் வெளிப்படும்.

கரு வளர வளர இடமளிக்கும் பொருட்டு கருப்பை விரிவதஞல் தசைகள் அருந்து விடுவதால் மார்பகத்தின் கீழும் தொடையின் முன்பக்கத்திலும் மெல்லிய நீல நிற அல்லது மஞ்சள் நிறக்கோடுகள் காணப்படும். இக்கோடுகள் குழந்தை பிறந்த பிறகும் வெள்ளை நிறமாக மாறி அப்படியே நிலைத்துவிடுகின்றன. இக்கோடுகளே ஒரு பெண் தாய்மை அடைந்தவள் எனத் தீர்மானிக்கத்தக்க சான்ருகும்.

மூன்ருவது மாதக் கடைசியிலே கருப்பையானது ஐந்து நிமிஷத்துக்கொருமுறை சுருங்கி இரண்டு நிமிஷம் அப்படியே இருந்து மீண்டும் விரிந்து அதுபோல் சுருங்கும். இது கருப்பை அசைவு எனப்படும்.

நான்காவது மாதம் கருப்பையிலுள்ள குழந்தை அசையத் தொடங்குகிறது. இது கரு அசைவு எனப்படும். இவ்வசைவைத் தொடக்கத்தில் உணருவது நுட்பமாயினும் நாளாக ஆக நன்ருக உணரலாம். வயிற்றின் மீது கை வைத்து பார்த்தால் குழந்தையின் கை கால்கள் அசைவு தெளிவாகப் புலப்படும். இந்த அசைவு காலையிலும் மாலையிலும் அதிகரித்தும் பகல் வேளையில் குறைந்தும் காணும். இந்த அசைவு ஒரே அடியாக நின்று விடுமாயின் ஒருசில வற்றில் குழந்தைகள் இறந்திருக்கக் கூடும். ஆனல் பெரும்பாலானவைகளில் அங்ஙனம் நிகழ்வதில்லை.

இதுவரை அடக்கமாக இருந்த வயிறு ஐந்தாவது மாதத்திலே பெருக்கத் தொடங்கி கர்ப்பிணி என்பதைப் பறை சாற்றி விடும்.

வளர்ந்துவரும் கருவுக்கு இரத்தம் பாய்ச்சவேண்டியிருப்பதால் முன்னிலும் அதிகமான இதயத் துடிப்பு இருக்கும்.



கருப்பையின் அழுத்தத்தால் காலிலுள்ள அசுத்த ரத்தக் குழாய்கள் சற்றுத் தடித்துக் காணும். வளரும் கருப்பை சுவாசப் பையை அமுக்குவதால் மூச்சுவிடும்போது சற்றுத் திணரல் இருக்கும். தொண்டையிலுள்ள தசை நார்கள் தடித்துவிடுவதால் குரலிலே சிறிது மாறுதல் ஏற்படும். இடுப்பு எலும்புக்கட்டு தளர்ந்துவிடுவதால் நடையிலே மாறுதல் ஏற்படும். மயிர்க்கால்களிலே ஊடுருவி நிற்கும் கொழுப்புக் கோளங்களும் வியர்வைக் கோளங்களும் அதிக வேலை செய்வதால் உடலிலே ஒருவித நெடி கமழும். இவ்வறிகுறிகளெல்லாம் கருவுற்றுவிட்டமைக்குத் தக்க ஆதாரமாகும். எனினும் தேர்ந்த மருத்துவ வல்லுனரால் ஆய்ந்து கூறப்படும் முடிவே சிறந்ததும் ஐயந் தெளிந்ததுமாகும்.

தான் கருவுற்றிருப்பதைப்பற்றி தெளிவுபடுத்திக் கொள்ளவும், கடைபிடிக்கவேண்டிய முறைகளை அறிந்துகொள்ளும் பொருட்டும் மருத்துவரிடம் செல்வோமாயின் அவர் மாதவிடாய் நின்றது முதல் அதுவரை ஏற்பட்டுள்ள அனுபவங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பின்னரே பரிசோதனை தொடங்குவார்.

வயிற்றின்மீது கைவைத்து சற்று அழுத்தித் தடவிப் பார்த்தால் கருப்பையின் வளர்ச்சி, கருவின் அசைவு ஆகியவற்றை அறிந்துகொள்ள முடியும். வயிற்றின் அடிப்பாகத்தில் தலையும், தொப்பிளுக்கு மேலே புட்டம் மெத்தென்றும், அள்ளைப் பகுதியில் ஒருபுரம் முதுகும் ஒருபுரம் கை கால்கள் சிறுசிறு துண்டுகள்போலவும் கைகளுக்குத் தட்டுப்படும். நோய் வாய்ப்பட்ட கருப்பையாக இருந்து அதிலே கட்டிகள் தோன்றியிருந்தால் இப்படித் தென்படக்கூடும். எனவே மருத்துவர்களும் இப்பரிசோதனையிலே சிலபோது ஏமாந்துவிடுவதுண்டு. ஐந்து மாதம் கடந்த பின்னரே ஐயந்திரிபற அறியக்கூடும். ஏழாவது மாதத்திலே மிக எளிதில் தெரிந்துவிடும்.

(தொடரும்).

# அகோனைட் நாபிலஸ்

(மூலம் : டாக்டர் கெண்டின் மெடீரியா மெடிகா)

தொண்டையிலுள்ள எந்தக் குறி நோயாளிக்குத் தேவையான மருந்தைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது? தொண்டையில் எவ்வகையான புண் இருந்தாலும் விழுங்கும்போது கஷ்டத்தை உண்டாக்கத்தான் செய்யும். ஆகவே தொண்டையில் புண் இருப்பதைக் கண்டு ஒருவரை அகோனைட் நோயாளி என்று சொல்ல முடியாது என்பதையே விளக்குகிறேன். அந்நோயாளி நல்ல இரத்தம் உள்ளவராகவும் பகலில் நீண்ட நேரம் வறட்சியான குளிர் காற்றில் எதிர்முகமாய்ச் சென்று அடிபட்டிருப்பவராகவும் இரவு நடுத்தூக்கத்தில் விழிப்பு உண்டாகித் தொண்டையில் கடுமையான எரிச்சல், தொண்டை கிழிந்துவிட்டதுபோல் புண்ணாய் இருத்தல், விழுங்க முடியாமை, கடுமையான சுரம், குளிர்ந்த தண்ணீர் குடிக்கத் தாகம், தன் தாகத்தைத் தீர்க்கும் அளவு தண்ணீர் கிடைக்காதோ என்ற எண்ணம், முகத்தில் கவலைத் தோற்றம், உடம்பில் அனல்படுவது, சூடான உணர்ச்சி ஆகிய குறிகளுடனும் இருந்தால் அவர் அகோனைட் கொடுக்கப்படவேண்டிய நோயாளியே. பல சமயங்களில் நீங்கள் நோய்க் குறிகளை ஆராயும் வழியைக் கண்டுகொண்ட நோயாளி தன் குடும்பத்திலுள்ள யாராவது ஒருவருக்கு நோய் கண்டால் அவர் எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதை உங்களுக்குத் தெளிவாய் அறிவிக்கும் ஆற்றலைப் பெற்றுவிடுவார். படித்தவர்களைவிடப் படிக்காதவர்களால் நோயின் விவரங்களைத் தெளிவாய் எடுத்துக் கூறச் சில சமயங்களில் முடியும்.

வயிற்றுக் குறிகளுடன் அகோனைட் நோயாளிக்கு எவ்வளவு கவலை இருக்குமென்று தெரியுமா? வலிகள் பயங்கரமாய் இருக்கின்றன குளிர் தாக்கியதால் கவலை, அமைதியற்ற தன்மை, சுரம் ஆகிய குறிகளுடன் எரிச்சலுடனும் கிழிப்பதுபோன்ற உணர்ச்சியுடனும் வலிகள். வயிற்றுக் கோளாறு அளவு மீறி உணவு உட்கொண்டதால் ஏற்படுவது அல்ல. சில்லென்று குளிர்ந்த தண்ணீரில் குளித்ததால் வயிற்றில் குளிர் தாக்கி அல்லது கடுங்கோடைக் காலத்தில்



உண்டாகும் அமிதச்சூட்டினால் திடகாத்திரமான குழந்தைகளுக்கு மூளையில் வேதனையுடன் ஏற்படுகிற வயிற்றுக் கோளாறு. வாந்தியும் குமட்டலும். குமட்டல் மிகக் கடுமையாய் வயிறு கிழிந்து உள்ளிருப்பவை வெளியே வந்துவிடுமென்று தோன்றும். இரத்தம் வாந்தியாகுதல், நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம். வயிற்றுக் கோளாறுகளைப்பற்றிய பொதுவான வர்ணனை இது. சுரமுள்ள இந்த நிலைமையில் நோயாளி கசப்பான பொருள்களும், ஒயின், பீர், பிராந்தி ஆகிய பானங்களும் வேண்டுமென்று கேட்பார். ஆனால் அவைகளை உட்கொண்டால் வயிற்றை அடைந்தவுடன் அவை வாந்தியாகிவிடும். உறைப்பான, காரமான பொருள்களைத் தின்ன ஆவல். ஆனால் எதுவும் நாக்கில் உறைப்பதில்லை. ஆயினும் உட்கொள்ளும் உணவுமட்டும் கசக்கும். தண்ணீரைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் கசக்கத்தான் செய்யும்.

"வயிற்றினுள் நீர்க்கோர்வை" என்று புத்தகங்களிலே ஒரு குறி காணப்படுகிறது. வயிற்றில் கடுமையாய் ஏற்படும் வேக்காடுதான் அது. பித்த நீர் வாந்தியாகும்; குமட்டல் உண்டாகும். இரத்தமும் வாந்தியாகும். வயிறு காலியாய் இருக்கும்போது வாந்தியெடுக்கவரும்போல் தோன்றும். ஆனால் வாந்தியாகாது. அத்துடன் கவலை, அமைதியற்ற தன்மை, சாவுப்பயம் முதலிய குறிகள் சேர்ந்திருக்கும். பயத்தின் அறிகுறி முகத்திலேயே தென்படுவதால் முகத் தோற்றமே பயங்கரமாக இருக்கும்.

கல்லீரல் வேக்காடுகளிலே, நோய் திடீரென்று தோன்றும் சமயங்களில் அகோனைட் உபயோகமுள்ள மருந்தாகிறது. வேக்காடு முதல் முறையாய் ஏற்படும்போதுதான் பயன்படும்; அடிக்கடி வருமானால் பயன்படாது. கல்லீரலில் கடுமையான வேக்காடு, கடுமையான கிழிக்கும் வலிகளுடனும் அதிக எரிச்சலுடனும் தோன்றும். அடுத்தபடியாக அமைதியற்ற தன்மை, பயங்கரமான, வேதனையூட்டும் கவலை, அடிக்கடி தன் இருக்கையை மாற்றுதல், சாவுப்பயம், முகம் சிவப்பாய் மாறுதல், பளபளவென்று ஒளி வீசும் கண்கள், அதிகத் தாகம் ஆகிய குறிகளும் தோன்றும். "கவலையுடன்

அமைதியற்ற தன்மை'' என்ற வார்த்தை இவ்வெல்லாக் குறிகளையும் குறிக்கிறது.

குளிர்காற்றில் அடிபட்டதாலும் குளிர் தாக்கியதாலும் அடி வயிற்றில் பாய்ந்தோடும் வலிகள், எரிச்சலுள்ள வலிகள். குளவி கொட்டுவதுபோன்ற வலிகள் ஆகியவை உண்டாகும். இதிலிருந்து நோய் எந்த இடத்திலே தோன்றியிருந்தாலும் அதில் அகோனைட்டின் குறிகள் காணப்படுகின்றனவா என்பதையே நாம் கவனிக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியவரும். அடிவயிற்றிலுள்ள பல்வேறு உறுப்புகளிலே வேக்காடு உண்டாகும். பெருங்குடலின் கீழ்ப்பகுதியிலே நீர்க்கோர்வை ஏற்படலாம். அல்லது மலக்குடலிலே நீர்க்கோர்வை ஏற்படலாம். இவ்விடங்களிலே நோய் கண்டால் இரத்த பேதியாய் உருவெடுக்கிறது. இரத்த பேதியில் முழுக்க முழுக்க இரத்தமே வெளியாகும். சிறிதளவு சீதகமும் இருக்கலாம். மலம் கழிக்கும் இடத்தைவிட்டுவருவது முடியாதென்று தோன்றும். சிறிதளவு இரத்தம் வாந்தியாவதுடன் மலக்குடலிலிருந்து இரத்தம் தோய்ந்த சளி வெளியாகும். இன்றிரவோ அல்லது சில மணி நேரத்துக்குள்ளோ தாம் இறப்பது நிச்சயமென்று நோயாளிகள் எப்போதும் கூறுவார்கள். சாவின் உணர்ச்சியை உணர்ந்துவிட்டவர்களைப்போலத் தோன்றுவார்கள். உடல் முழுவதுமே வேதனைக்குட்பட்டிருக்குமென்றாலும் ஆசனவாய்க் கடுப்பும் உடலெங்குமுள்ள தசைகளில் இழுக்கும் உணர்ச்சியும் மலம் கழிக்கத் தூண்டலும் ஒரே பயங்கரமாய் இருக்கும். அகோனைட்டில் வெறும் தண்ணீர்போலவே மலம் வெளியாகும் வயிற்றுப்போக்கு இருக்கிறது. அக்குறியை முக்கியமானதென்று டாக்டர் ஹெரிங் அவர்கள் இரட்டைக் கோடிழுத்துக் காட்டியிருக்கிறார். ஆயினும் அது அவ்வளவு முக்கியமான குறி அல்ல. ஆனால் சளியுடனும் ஆசனவாயில் கடுப்புடனும் இரத்தம் தனியாய்ப் போகுமானால் அல்லது பச்சிளம் குழந்தைகளுக்குக் கோடைக்காலங்களில் சிறிது பச்சையான சளி வெளியாகும்போதும், நல்ல திடகாத்திரம் வாய்ந்த சிறு குழந்தைகளுக்குச் சுரத்துடன் பச்சைப்புல் போன்ற நிறமுள்ள மலமோ அல்லது இரத்தம் மாத்திரமோ வெளியாகும்போதும் அகோனைட்டை நினைக்கவேண்டும். குழந்தைக



ளுக்கு உண்டாகும் குடல் கோளாறுகளில் பலவும் கடுமையான சூட்டினால்தான் ஏற்படுகின்றன. சூட்டினால் குழந்தையின் கல்லீரலில் வேக்காடும், மலம் பால்போல் வெண்மையாய் வெளிப்படுவதும் தோன்றுகின்றன. குழந்தையின் உடல் நிறம் மஞ்சளாகி வலியினால் கதறுகிறது.

மூத்திரம், மூத்திரப்பை, மூத்திரக்காய்கள் ஆகியவைகளின் கோளாறுகளில் அகோனைட் உபயோகப்படுகிறது. இரத்தம் கலந்த மூத்திரத்துடன் வேக்காடுள்ள நிலைமைகள் மூத்திரம் அளவு குறைவாகுதல், வெளியாகாமல் அடக்கப்படுதல் அல்லது உற்பத்தியாகாமல் இருத்தல். அதிர்ச்சியினால் மூத்திரம் வெளியாகாமல் அடக்கப்பட்டிருத்தல். அதிர்ச்சியினால் மூத்திரம் அடங்கிவிடுதல் என்ற குறி இருப்பதைக் கொண்டு பிறந்தவுடனே குழந்தைகளுக்கு மூத்திரம் வெளியாகாமல் இருந்துவிட்டால் அக்கோளாறை நீக்க இம்மருந்து மிகச் சிறந்ததாய் விளங்குகிறது. இவ்வுலகுக்கு வந்துள்ள அப்பச்சிளங் குழந்தைக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பிரசவமான பிறகு இரண்டாவது தடவை கேசைப் பார்க்கப் போகும்போது "குழந்தைக்கு இன்னும் மூத்திரம் இறங்கவில்லை." என்று நர்சு கூறுவார். பிறக்கும்போது ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாய் அக்குருத்து உடலின் வேலைகள் இன்னும் துவங்கவில்லையென்பதுதான் பொருள்.

வெட்டுவதுபோலவும் கிழிப்பதுபோலவும் வலிகளுடன் மூத்திரப்பையில் வேக்காடு. மூத்திரம் எரிச்சலைத் தரும். எரிச்சலுடன் வலிகள். மூத்திரம் சூடாய், கறுத்த சிவப்பு நிறமாய் இருக்கும்; தெளிவான சிவப்பு நிறமாக அல்லது இரத்தம் கலந்திருக்கலாம். குளிரினால், முக்கியமாகச் சிறுவர்களுக்கு, மூத்திரம் அடக்கப்பட்டு அழுகையும் அமைதியற்ற தன்மையும் உண்டாகும். வயது வந்தவர்களாயினும் குழந்தைகளாயினும் மூத்திரப்பையில் வேக்காடு உள்ள நிலைமைகளில் அகோனைட் நோயாளி என்று குறிப்பிடக்கூடிய மனக் குறிகள்யாவும் காணப்படும்.

திடீரென்று மிகக் கடுமையாய்த் தோன்றும் விரை வேக்காடுகளை அகோனைட் குணம் செய்கிறது. நல்ல இரத்தமுள்ளவர்களுக்குக் குளிரினால் அல்லது குளிர் தாக்குவதால் தோன்றும் விரை வேக்காடு. ஆனால் மேக வெட்டையில் போக்கைத் தடை செய்த பிறகு உண்டாகும் விரை வேக்காட்டுக்கு அகோனைட் உபயோகப்படாது.

---

பெண்களுக்கு இயற்கையிலேயே இரக்கமுள்ள சுபாவம் அமைந்திருப்பதால் பெண்களை இயற்கையான அகோனைட் நோயாளிகளென்று கூறலாம். நரம்பைத் தாக்கும் அதிர்ச்சிகளாலும், பயத்தினாலும் பெண்களுக்குக் கோளாறுகள் தோன்றுகின்றன. ஆண்களுக்கு நோயை உண்டாக்கும் காரணங்களுக்கு மாறான காரணங்கள் பெண்களிடம் நோயை தோற்றுவிக்கின்றன. பயத்தினால் ஆண்களுக்கு உடல் உறுப்புகளில் வேக்காடு ஏற்படுவது மிக அபூர்வம். ஆனால் நல்ல இரத்தமுள்ள திடகாத்திரமான பெண்களுக்குப் பயத்தினால், கருப்பை, சினைப்பை ஆகிய உறுப்புகளிலே வேக்காடு தோன்றுகிறது. பயத்தினால் பல சமயங்களில் கருச் சிதைவு நேருகிறது. ஆரம்பத்திலேயே அகோனைட்டைக் கொடுத்து விட்டால் பயத்தினால் ஏற்படக் கூடிய கருச் சிதைவைத் தடுத்து விடலாம். பயம் அல்லது திடீரென்று மன உணர்ச்சிகளின் அதிகரிப்பு காரணமாகச் சில சமயங்களில் அகோனைட்டின் குத்து வலிகள், எரிச்சல் வலிகள், கிழிக்கும் வலிகள் ஆகியவை தோன்றலாம். சில சமயங்களில் கருவுற்றிருக்கும் ஒரு பெண்மணி "டாக்டர், என் பிள்ளைப் பேறு விஷயமாய் நீங்கள் போடும் திட்டங்களால் எந்த உபயோகமும் இல்லை, ஏனென்றால் பிள்ளைப் பேறு காலத்தில் நான் இறந்து போவது நிச்சயமென்பது எனக்குத் தெரியும்' என்று கூறுவார். உண்மையான பலம் வாய்ந்த ஒரு குறியை அடிப்படையாக வைத்து மருந்து கொடுப்பது உண்டு என்றால் அத்தகைய குறி இதுவே. ஒரே ஒரு வேளை அகோனைட்டைக் கொடுத்து விட்டுப் பிறகு பேச்சை மாற்றி அப்பெண்மணியை அனுப்பி விடலாம். சில நாட்கழித்து அந்த பயத்தைப் பற்றி அவரிடம் கேட்டால் "ஓ, அதைப்பற்றிய கவலை வேண்டாம்." என்று பதில் கிடைக்கும். பல சிறிய விஷயங்களை இதைப் போல்



தனியாய்க் குறிப்பிடலாம். ஆனால் அந்த பயந்த நிலை மிக விசித்திரமான விஷயம். அப்பெண்மணியின் இயற்கையை அது முற்றிலும் அறிவிக்கிறது. தான் சாகப்போகும் நாளை அவள் ஜோஸியம் சொல்லுகிறார். பச்சிளங் குழந்தைகளுக்கும் பல சமயங்களில் அகோனைட் அரு மருந்தாய் உபயோகமாவதற்குக் காரணம் அவை அடிக்கடி பயந்து கொண்டு பயத்தின் விளைவாய் நோய்கள் தோன்றுவது தான்.

நல்ல இரத்தமுள்ள பெண்களுக்குப் பிறப்பு உறுப்புக்களில் வேக்காடு. ஆண்களை விடப் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமே அகோனைட் அதிகமாய்ப் பயன்படுகிறது. எளிதிலே உணர்ச்சிவசப்படும் திடகாத்திரமான பெண்கள். வறண்ட, குளிர் காற்றில் அடிபட்டதால் ஆண்களுக்கு உடல் உறுப்புகளில் வேக்காடு தோன்றுவதற்கு அகோனைட் உபயோகப்படுகிறது. அகோனைட் தேவைப்படும் கடுமையான சுரத்தில், அச்சுரம் சமீபத்திலே தோன்றியதாய் இருந்தால் நோயாளிக்கு அகோனைட்டைக் கொடுத்து மிக விரைவில் வியர்வை தோன்றும்படிச் செய்து ஹோமியோபதியிலுள்ள அற்புதமான நோயகற்றும் விந்தைகளைப் பற்றி நோயாளிகளுக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் செய்யலாம்.

கடுமையான, நீண்ட நேரம் நீடித்து வலிகள் இருந்து பிறகு பிரவசம் ஆகுதல். அதன் பிறகும் கடுமையான மண்புத்து வலிகள் சுரத்துடன் பாய்ந்தோடும், கிழிக்கும் வலிகள். கருப்பையிலிருந்து சிவந்த நிறமுள்ள இரத்தப் போக்கும் சாவுப்பயமும், பிள்ளை பெற்று அறையில் இருக்கும் சமயங்களில் குளிர் தாக்கி நோய் தோன்றும் காலங்களில் அகோனைட்டின் வேலை அற்புதம். ஆனால் பிள்ளைப் பேறுக்காலச் சுரத்தை இதனுடன் சேர்க்கக்கூடாது. முதலில் சொல்லப் பட்ட நோய் சாதாரண மானது. இரத்தத்தில் விஷப்பொருள் எதுவும் சேரவில்லை. சில சமயங்களில் ஸ்தனங்களில் வலி, பால் அடக்கப்படுதல், சுரம் இருப்பது போல் அறிகுறிகள் ஆகிய குறிகள் காணப்படலாம். ஆனால் அச்சமயங்களில் கருப்பையிலிருந்து வரவேண்டிய கழிவுநீர் அடக்கப் பட்டிருந்தால் அகோனைட்டைக் கொடுக்கக் கூடாது.

கஷ்டப் பிரசவம், சாமணங்களைக் கொண்டு குழந்தையை வெளியே எடுத்தல் ஆகியவைகளால் பிறந்தவுடன் குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படும் இருதயமும் சிரமப்பட்டுத் துடிக்கிறது; சில மணி நேரத்தில் சுரமும் வந்து விடுகிறது. இளம் குழந்தைகளுக்கு மூத்திரம் அடங்கி விடுவது பொதுவாக அகோனைட்டுக்கு உரிய குறி. வேறு மருந்தைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படாது. குழந்தையால் பேச முடியாது. தன் குறிகளை அதிகமாய் வெளியிடவும் அதனால் முடியாது. அதனால் இச்சமயங்களில் வைத்தியர் சம்பிரதாயமான முறைகளைப் பின் பற்றிதான் ஆகவேண்டும் மூத்திர அடக்கத்தில் எல்லா வைத்தியர்களும் அகோனைட்டைக் கொடுத்து வெற்றி பெற்றுள்ளனர். அதே போல குழந்தையின் தாய்க்கு மூத்திர அடக்கம் தோன்றும் போது காஸ்டிகம் என்ற மருந்தினால் அந்நிலை குணமடைகிறது.

அடுத்த இதழில்

**அகோனைட் நிறைவுரும்; அபிஸ் மெலிபிகா ஆரம்பமாகும்.**

**ஹோமியோபதி மித்திரன்**

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | .... | ரூ. 3-00 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | .... | ரூ. 0-38 ந.பை. |
| சிலோன், மலேயா ஆகிய வெளிநாடுகளுக்கு வருடச் சந்தா | | ரூ. 4-00 |

# அனுபவங்கள்

(டாக்டர் திவான் ஜய் சந்த்)

— முன் மாதத்தொடர்ச்சி —

## குடல் வால் வேக்காடு—இரண்டாவது கேசு

1929-ம் ஆண்டு ஸெப்டம்பர் மாதத்தில் ஸ்ரீமான் ஜி. எம். என்பவரிடமிருந்து தந்தி மூலம் எனக்கு அழைப்பு வந்தது. ஸிந்து மாகாணத்திலுள்ள சுக்கூரில் ரயில் இலாக்காவில் அவர் ஆபீஸராய்ப் பணியாற்றி வந்தார். அவருக்குக் குடல் வாலில் வேக்காடு தோன்றி மும்முர நிலையில் இருந்தது. லாகூரிலிருந்து சுக்கூருக்கு ரயிலில் போகவேண்டும். பயணம் 15 மணி நேரம் மிகவும் அலுப்பைத் தருவதாய் இருந்தது. அங்கு போய்ச் சேர்ந்ததும் நோயாளியைப் பார்த்தேன். படுக்கையில் மல்லார்ந்து படுத்து வலது காலை மடக்கி வைத்துக் கொண்டிருந்தார். மடக்காவிட்டால் அடிவயிற்றின் வலப்பக்கத்தசைகள் விரைப்பாய் வலி உண்டாகிறதாம். அப்பக்கத்தை மெதுவாய் அமுக்கிப் பார்த்தபோது அங்கு சிறிய ஆப்பிள் பழத்தைப் போல் கட்டியொன்று தென்பட்டது. தொட்டால் வலி அதிகமாகிறது. அடிக்கடி அங்கு குத்து வலி உண்டாகிறது. சுரம் சற்று ஏறக்குறைய 103 டிகிரி இருந்தது. பத்து நாட்களுக்கு முன்பாகக் கடுமையான வலியுடனும் வாந்தியுடனும் நோய் தோன்றியதாக நோயாளி கூறினார். சுக்கூர் மாவட்ட ஸிவில் ஸர்ஜன் ஆரம்பத்திலிருந்து கவனித்து வந்ததாகவும் ஆனால் மருந்துகளால் குணப்படுத்தக்கூடிய எல்லையை நோய் தாண்டி வந்துவிட்டதால் இனி ஆபரேஷன் தான் குணம் அளிக்குமென்றும் அவர் அபிப்பிராயப் பட்டாராம். உடனே குவெட்டா என்னும் நகரத்திலிருந்த ஒரு ஐரோப்பிய ஸர்ஜனுக்கும் அதே சமயத்தில் எனக்கும் தந்தி அடித்தாராம். ஒரு வேளை ஐரோப்பிய ஸர்ஜன் வராவிட்டால் ஹோமியோபதிச் சிகிச்சையையாவது பார்க்கலாமே என்ற எண்ணத்துடன் அப்படிச் செய்தாராம். குவெட்டாவுக்குப் போக அவருடைய நோய் நிலைமை இடம் தரவில்லை. குவெட்டாவிலிருந்த ஸர்ஜன் தன்னால் வருவதற்கு முடியவில்லையென்று பதில் தந்தி அனுப்பிவிட்டார். இது நோயாளியின் அதிஷ்டம். அச்சமயத்தில் நான் போய்ச் சேர்ந்தேன்.

முதல் இரண்டு நாட்களுக்கு **ப்ரியோனியா 30**-ஐ ஆறு மணிக்கொரு முறையாய்க் கொடுத்தேன். உடனேயே அவருடைய நிலைமையில் அபிவிருத்தி உண்டாகியது. அவ்வபிவிருத்தி தங்கு தடையின்றி முன்னேறி வந்ததால் நான் லாகூருக்குத் திரும்பி வந்தேன். இப்படி ஒரு வாரம் சென்ற பிறகு தன் உடல் வலிமை திரும்பியதைக் கண்டு சூடான வென்னீரில் தலைக்கும் சேர்த்துக் குளித்து விட்டு உடனே சில்லென்று காற்று வீசும் இடத்திலே நின்று கொண்டிருந்தார். அதன் விளைவாய்ச் சில மணி நேரத்தில் மார்பில் வலியும் சுரம் இருப்பதுபோல் உடலில் சூடான உணர்ச்சியும் தோன்றின. நோயில் சிக்கல் வந்துவிடப் போகிறதே என்று பயந்து கொண்டு அவர் லாகூருக்கே புறப்பட்டு வந்து விட்டார். வந்தவுடனே அவரைச் சோதித்ததில் துருப் பிடித்த கபம், இருமல், கடுமையான சூடு ஆகியவைகளுடன் கூடிய நிமோனியாச் சுரமென்பது தெரிந்தது. ஒருசில வேளைகள் ஃபாஸ்பரஸ் 30 கொடுத்தவுடன் நோய் முழுவதும் நீங்கியது. ஆயினும் இரத்தம் கலந்த கபம் நிற்காமல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இதற்காகச் சுமார் 5 வாரங்கள் மருந்து கொடுத்ததில் முழுவதும் குணம். இழந்த உடல் வலிமையைத் திரும்பிப்பெற இன்னும் சில வாரங்கள் பிடித்தன. அதன் பிறகு வேலையில் சேருவதற்காக அவர் அரசாங்க வைத்திய போர்டினால் சோதிக்கப்பட்டார். வேலை பார்க்க தகுதியுடையவர் என்று அவரைப் போர்டு அங்கீகரித்தது. நோயின் முழு வரலாற்றையும் அவர் எடுத்து கூறியபோது குடல் வாலிலிருந்து அவ்வளவு பெரிய சீழ்க்கட்டி ஹோமியோபதிச் சிகிச்சையினால் இருந்த அடையாளம் தெரியாமல் மறைந்து விட்டது என்பதை அவர்களால் நம்பவே முடிய வில்லையாம்.

நோயாளி இப்போதும் உயிருடன் இருந்து வருகிறார். கடந்த 21 ஆண்டுகளில் அந்நோய் மறுபடி ஒரு தடவைக் கூடத் தலைகாட்டவில்லை.

### குடல் வால் வேக்காடு—மூன்றாவது கேசு

ஸ்ரீமான் H. R. ஒரு இளைஞர். 14-12-1939 அன்று பிற்பகலிலே குடல் வால் பகுதியிலே திடீரென்று வலி தோன்றியது. (காலையில் அவர் சற்றுக் கனமான உணவு சாப்பிட்டாராம். அதாவது வெண்ணெயில் பொரித்து எடுத்தக் கோதுமை ரொட்டி, முட்டைக்கோசுக்கறி இன்னும் மற்ற உணவுப் பண்டங்கள்) வலி விரைவில் மிகக் கடுமையாகியது. ஒரு வருஷத்துக்கு முன் இதைப்போன்ற ஆனால் இவ்வளவு கடுமையாய் இல்லாத வலி வந்தபோது சிகிச்சை செய்த அலோபதி வைத்தியரை அழைத்தாராம். அவர் வந்து பார்த்து வலி தெரியாமல் இருக்க ஒரு மிக்ஸ்சர் மருந்தை எழுதிக் கொடுத்து விட்டுக் குடல் வாலை உடனே ஆபரேஷன் செய்து எடுத்துவிடவேண்டுமென்றும் இல்லா விட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படுமென்றும் ஆலோசனை கூறினாராம். அந்த மிக்ஸ்சரினால் எவ்வித அனுகூலமும் ஏற்படவில்லை. ஆபரேஷன் செய்து கொள்ளப் பிரியம் இல்லை. ஆதலால் மாலையில் என்னைக் கூப்பிட்டனுப்பினார். நான் பார்த்த போது அவர் இரண்டு முழங்கால்களையும் மடக்கிக் கொண்டு மல்லார்ந்து படுத்திருந்தார். எந்தப் பக்கமும் திரும்பிப் படுக்க அவர் விரும்பவில்லை. சுருட்டிப் பிடிக்கும் கடுமையான வலிகள் குடல் வால் பகுதியோடு அடிவயிற்றின் வலது கீழ்ப்பகுதி முழுவதும் பரவி இருந்தன. வலியுள்ள இடத்தை மெதுவாய்த் தொட்டுப் பார்க்கக் கூட என்னை இலகுவில் அனுமதிக்கவில்லை. அவர் சில நிமிஷங்களுக்கு ஒரு முறையாக வலி மிகக் கடுமையாய்த் திடீரென்று தோன்றுவதும் மறைவதுமாய் இருந்தது. இலேசான சுரம், அடிவயிறு உப்பியிருந்தது. **பெலடோனா 30**-ல் சில மாத்திரைகளைத் தண்ணீரில் கரைத்து அரைமணிக்கொரு முறையாக ஒரு டீஸ்பூன் அளவு வலி தணியும் வரை கொடுக்கச் சொன்னேன். 15-ம் தேதி காலையில் நோயாளி வலப் பக்கமாய்த் திரும்பிப் படுத்திருப்பதாகவும் வலியுள்ள பகுதிக்குக் கீழே துணிகளைச் சிறு மூட்டைபோல் சுருட்டி வைத்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். வேறுபக்கமாய்ப் படுத்தால் வலி உண்டாகிறது. உடனே **ப்ரியோனியா 30**-ஐ மூன்று மணிக்கொரு வேளையாகக் கொடுத்தேன். 17-ம் தேதிக் காலையில் நோயாளி சௌகரியமாய் இருந்து வருவதாகவும், சுரம் அடங்கி விட்டது என்றும் வலி இருந்த இடத்தைத் தொட்டால்மட்டும் வலி தெரிவதாகவும் தகவல் கிடைத்தது. இந்த வலி உணர்ச்சியும் சில நாட்களில் மறைந்துபோய் விட்டது.

1940-ம் ஆண்டு ஸெப்டம்பர் மாதத்தில் அவரை நான் கடைசியாகப் பார்த்தேன். அதுவரை எவ்விதக் கோளாறும் இல்லாமல் அவர் சுகமாய் இருந்தார்.

### 2. முண்டுகள், காய்ப்புகள்—முதல் கேசு.

பல ஆண்டுகளுக்கு முன், என் மனைவிக்கு வலது கை மணிக்கட்டின் பின்புறத்தில் இலந்தைப் பழத்தின் அளவுள்ள முண்டு இருந்தது. மணிக்கட்டை வளைக்கும்போது வலி உண்டாவதால் அம்மூட்டில் அசைக்கும்போது சிரமமாய் இருந்துவந்தது. தலைமயிரை வார உதவும் புருசின் (Brush) கட்டையினால் முண்டை அடித்து வந்தால் அங்குள்ள நீர் சுற்றிலுமுள்ள இழையங்களுக்குச் சென்று அவைகளால் உறிஞ்சப்பட்டுவிடுமென்று யாரோ சொன்னதைக் கேட்டு அதன்படியே நடந்ததால் முண்டைத் தொடுவதற்குக்கூட முடியாமல் வலி தோன்றிவிட்டது. இதுபோன்ற முண்டுகளுக்கு **ஸல்ஃபரை** C. M. வீரியத்தில் கொடுத்தால் நன்மை உண்டாகுமென்று டாக்டர் க்ளார்க் அவர்களால் எழுதப்பட்ட **ப்ரெஸ்க்ரைபர்** என்னும் நூலில் படித்திருக்கிறேன். அவருடைய யோசனை எப்படி இருக்கிறது பார்க்கலாமென்று எண்ணினேன். அதுவரை ஸல்ஃபரையோ அல்லது வேறு மருந்தையோ அவ்வளவு உயர்ந்த வீரியத்தில் நான் எந்த நோயாளிக்கும் கொடுத்தது கிடையாது. என் மனைவிக்கு ஸல்ஃபரை C. M. வீரியத்தில் ஒரே ஒரு வேளைதான் கொடுத்தேன். மூன்று வாரத்துக்குள் முண்டு மறைந்துவிட்டது. 1909-ஆம் ஆண்டில் இந்நோயாளிக்கு **ஸ்காபீஸ்** (Scabies) என்று அழைக்கப்படும் அழுகுணிச் சிரங்கு தோன்றி அதனால் ஸ்தனங்களில் வேக்காடு உண்டாகிச் சீழ்ப்பிடித்தது என்பதை இப்போது குறிப்பிடத்தகுந்தது. அச்சமயத்தில் ஸல்ஃபர் களிம்பைச் சிரங்குகளின் மீது அழுத்தித் தடவிவந்ததில் ஒரு வாரத்துக்குள்ளேயே அவை மறைந்துவிட்டன.

### முண்டுகள், காய்ப்புகள்—இரண்டாவது கேசு

நான் ஹோமியோபதி வைத்தியத்தில் இறங்கிய புதிதில் ஒருவர் தன்னுடைய இளம் மனைவிக்கு இரு மணிக்கட்டுகளின் பின்புறத்தில் பாதாங்கொட்டையளவில் இருந்த முண்டுகளைப் பற்றி என்னிடம் ஆலோசனை கோரி வந்தார். எந்த முண்டி-



னும் வலி இல்லை. அழுத்தினாலும் வலி இல்லை. ஆனால் மிகப் பலமாய் அழுத்தினால் வலி உண்டாயிற்று. ரொட்டி செய்யக் கோதுமை மாவைப் பிசைந்து உருட்டும்போது மணிக்கட்டுகளில் அதிக அசைவு ஏற்படுவதால் அச்சமயங்களில் நோயாளிக்குக் கஷ்டம் தோன்றுகிறது. நாளொன்றுக்கு 3 வேளைகள் வீதம் **கல்கேரியா ஃப்ளுவாரை 6x** வீரியத்தில் கொடுத்துவந்தேன். பதினைந்து நாட்களுக்குள் முண்டுகள் மறைந்து நோயாளிக்குச் சுகம் கண்டது.

### 3. காதினுள்ளே சீழ்ப்புண்

15-3-1940 அன்று ஸ்ரீ A. K. என்பவர் என்னிடம் ஆலோசனை பெற வந்தார். வலதுபக்கக் காதினுள் வேக்காடு தோன்றி சீழ்ப்பிடிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. காதின் மேற்புறம் சிவந்து சூடாகவும் இருந்ததுடன் ஏராளமாய் வீங்கி தொட முடியாத வலியுடன் காணப்பட்டது. காதைச் சுற்றிக் கம்பளிப் பஞ்சினால் மூடிக்கட்டியிருந்ததால் அங்கு சிறிது சூடு உண்டாகி அச்சூட்டினால் வலி சற்றே குறைவாய் இருந்தது. மிகக் கெட்டியான, தொட்டால் ஒட்டும் குணமுள்ள சீழைப்போன்ற, மஞ்சளான ஊநீர் வலது காதிலிருந்து வழிந்துகொண்டிருந்தது. நோயின் ஆரம்பத்திலிருந்தே பெயர்பெற்ற அலோபதி வைத்தியக் காது நோய் நிபுணர்கள் சிகிச்சை செய்துவந்திருக்கின்றனர். அவர்கள் காதுத் துவாரத்தினுள் ஸிரிஞ்சு மூலம் தண்ணீரைச் செலுத்திச் சுத்தம் செய்து பலவகை மருந்துகளை ஊற்றி வந்தும் எவ்வித நன்மையும் உண்டாகாமல் காதினுட்பக்கத்தில் வீக்கம் அதிகரித்தது. அதன் பிறகு அவர்கள் செவிப்பறையைத் துளைசெய்து அதன் மூலம் நடுக்காதிலுள்ள சீழ்ப்பொருளை வெளியேற்ற முயற்சித்தனர். இதனால் ஏற்பட்ட அனுகூலம் சில நாட்களுக்குத்தான் நீடித்திருந்தது. நோய் ஆரம்பித்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப்பின் தோன்றிய சுரம் ஓரளவு கடுமையாகிச், செவிப்பறையில் துளைசெய்த பிறகு சற்றுத் தணிந்தது. ஆனால் காதிலிருந்து சீழ் வடிந்துகொண்டிருந்தபோதிலும் உடனேயே சுரம் முன்போலவே அதிகமாகிவிட்டது. இதன் விளைவாய் ஆபரேஷன் செய்து உட்காதுப் பகுதியை அறுத்தெடுத்துவிட அலோபதி வைத்தியர்கள் முடிவு செய்தனர். ஆபரேஷன் என்றால்

நோயாளி குலை நடுங்கும் இயல்புள்ளவர். ஹோமியோபதியில் ஆச்சரியமான வகையில் நோய்கள் குணமடைவதைக் கேள்விப்பட்டிருக்கிறார். ஆதலால் என்னிடம் வந்தார்.

**காப்ஸிகம் 200** ஒரு வேளை மருந்து கொடுத்தேன். வேக்காடு குறைய ஆரம்பித்தது. நல்லபடியாகக் குணம் ஏற்பட்டுவிடுமென்று நினைக்கும் சமயத்தில் திடீரென்று சுரம் திரும்பிவந்தது. அத்துடன் மெதுவாய்க் குறைந்து மறைந்துகொண்டிருந்த மற்றக் கோளாறுகளும் திரும்பிவந்துவிட்டன. 26-3-1940 அன்று **ஸைலீஷியா 200** ஒரு வேளை கொடுத்தேன். பலன் விளையாததால் 30-ம் தேதியன்று காப்ஸிகத்தையே 200 வீரியத்தில் ஒரு வேளை. பிறகு ஏப்ரல் 10-ம் தேதியன்றும் ஒரு வேளையாய்க் கொடுத்தேன். இப்போது குணமாகும் அறிகுறிகள் மருந்து கொடுத்த உடனேயே தோன்றின. ஏப்ரல் மாத முடிவிலே முற்றிலும் குணமாகி நோயின் சுவடு சிறிது கூட மிஞ்சவில்லை.

அதன் பிறகு மூன்று மாதங்களுக்கு எனக்கும் நோயாளிக்கும் தொடர்பு இருந்தது. அதுவரை அவர் நன்றாகவே இருந்து வந்தார்.

### 4. மூத்திரத் துவாரத்திற்கருகே சதைக்கட்டி

நடுத்தர வயதும் சிவந்த நிறமும் நல்ல சதைக்கட்டும் தொள தொளவென்று தளர்ந்த தசைகளும் உள்ள ஓர் பெண்மணி 10-6-1935-ல் பிற்பகலில் தன் கணவருடன் என்னிடம் வந்தார். கடுமையான வலியைத் தரும் ஒரு கோளாறு அவளுக்கு இருந்தது. அதை நீக்க ஆபரேஷனைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது. இம்மாகாணத்திலிருந்த பிரபல ஸர்ஜன் ஒருவர் திட்டவட்டமாய்ச் சொல்லிவிட்டார். ஆபரேஷன் என்றால் அவளுக்கு ரொம்பப் பயம். ஆதலால் அவள் கண்ணீர்விட்டுக் கதறினாள்.

சென்ற சில வாரங்களாய் மூத்திரம் வெளியாகும் போது அவளுக்கு வலி இருந்து வருகிறது. இந்தவலி படிப்படியாக அதிகமாகி வருகிறது. வலியுடன் எரிச்சல். மூத்திரம் கழிக்கும்போதுமட்டுமின்றி அதன்பிறகு சில நிமிஷங்களும் மற்ற சமயங்களில் அரைமணி நேரமும் வலி தொடர்ந்திருக்கும்



...000 ...

ஆனால் மூத்திரம் வெளியாகும் சமயத்தில்தான் வலி கடுமையாக இருக்கிறது. அதனால் மூத்திரம் கழிக்கத் தூண்டுதல் ஏற்பட்டவுடன் அதைக் கழித்துவிடாமல் முடிந்தவரை அடக்கிக்கொள்ள முயற்சிப்பாளாம். ஆபரேஷனைச் சிபாரிசு செய்த ஸர்ஜன் நோய் உள்ள இடத்தைச் சோதித்து மூத்திரத் துவாரத்தின் அருகே சதைக்கட்டி என்று நிர்ணயம் செய்தாராம். என் வைத்தியத் தொழிலிலே அதுவரை இம்மாதிரியான கேஸை நான் கண்டதில்லை. ஆயினும் நோயாளிக்கு உதவிசெய்யவேண்டுமென்ற எண்ணத்தினால் உந்தப்பட்டு டாக்டர் ஹெல்மத் அவர்களால் எழுதப்பட்ட ஸிஸ்டம் ஆஃப் ஸர்ஜரி (System of Surgery) என்ற நூலைப் பார்வையிட்டேன். வேதனைதரும் இந்நோய்க்கு **யுகலிப்டஸ் குளோபுலஸ்** என்னும் மருந்தை 1-x வீரியத்தில் கொடுத்துக் குணம்செய்யலாமென்று அந்நூலில் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. உடனே அம்மருந்தை 1-x வீரியத்தில் வேளைக்கு ஒரு சொட்டு வீதம் ஷுகர் ஆஃப் மில்கில் கலந்து நாளொன்றுக்கு 3 வேளைகள் உட்கொள்ளக் கொடுத்து சதைக்கட்டியுள்ள இடத்தின்மேல் யுகலிப்டஸ் கலந்த கிளிஸரீனைத் தடவிவரச் சொன்னேன். இதனால் மறுநாளிலிருந்தே குணம்தோன்றி 15 நாட்களில் நோய் முற்றிலும் சுகமாகிவிட்டது. நாளிது வரை எவ்விதத் தொந்திரவும் இல்லை.

மேலுள்ள சிகிச்சை முறையை முதன் முதலில் சிபாரிசு செய்தவர் டாக்டர் ஜே. எச். வுட்பரி என்பவர்.

### 5. காலின் உட்புறத்தில் சீழ்க்கட்டி

ஸ்ரீ கெ. எஸ். 14 வயதுப் பெண். 1-3-1938-ல் பார்த்தேன். 103 டிகிரிக்குமேல் சுரம் இடது காலின் மேற்பகுதியில் வலி, இடது சப்பையின் வெளிப்புறத்தில் வீக்கம், அவ்விடத்தைத் தொட்டுப் பார்த்தால் சில்லென்று குளிர்ச்சியாய்த் தென்படுகிறது. வாய் காய்ந்து, நாக்கின்மீது அழுக்கு அடையாகச் சேர்ந்து, ஏராளமான தாகம் இருக்கிறது. முகம் கவலையுள்ள தோற்றத்துடன் காணப்படுகிறது. முகத்தில் சூடான வியர்வை உண்டாகிறது. உடல் காய்ந்திருக்கிறது. ஒரு நாள் காலையில் பள்ளிக்குச் செல்லும் போது இடது சப்பையில் வலி உண்டாகியது. சில மணி

நேரத்துக்குள் அவ்வலி அதிகமாகி நொண்டி, நொண்டி நடக்க வேண்டியதாகிவிட்டது. அன்று இரவே சுரம் வந்துவிட்டது. அடுத்த 5 நாட்களுக்கு சிறந்த அலோபதி டாக்டர்கள் கவனித்தனர். எக்ஸ்-ரே எடுத்ததில் திட்டமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இரத்தத்தைச் சோதித்ததில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித்ததைத் தவிர உபயோகமான விவரம் எதுவும் தெரியவில்லை. அதனால் நோயாளியைச் சோதித்துப் பார்க்கும் நிலையிலேயே வைத்தனர். அலோபதி வைத்தியத்தால் கோளாறுகள் நீங்கவில்லை என்பதோடு திருப்தியும் ஏற்படாததால் யுனானி ஹகீம் ஒருவரிடம் சிகிச்சை செய்யப்பட்டது. மூன்று நாட்களுக்கு அவரிடமிருந்து பெற்ற மருந்துகளை உள்ளுக்குச் சாப்பிட்டும் மேலே தடவியும் வந்ததில் அணுவளவும் அனுகூலம் இல்லை. நோய் படிப்படியாய் அதிகரிக்கவே செய்தது. வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட இப்போது மேலும் பெருகிவிட்டது.

**மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ் 1000** வீரியத்தில் ஒரு வேளை மட்டும் கொடுத்தேன். அதனால் நோயாளியின் எல்லாக் கோளாறுகளும் குறையத் துவங்கின. சப்பை வீக்கமும் குறைந்தது. ஆனால் மார்ச்சு 4-ந் தேதி இரவில் சுரம் அதிகரித்து நோயாளிக்கு அதிக வேதனை தோன்றியது. அதனால் **கல்கேரியா கார்ப்** 200 வீரியத்தில் ஒரு வேளை கொடுக்கத் தீர்மானித்தேன். அதனால் நோய் படிப்படியாய்க் குறைந்து பத்து நாட்களுக்குள்ளேயே பழைய ஆரோக்கிய நிலைமை மீண்டும் வந்தது. மேற்கொண்டு எந்த மருந்தும் கொடுக்கவில்லை. உள்ளே இருந்த சீழ்க்கட்டி அப்படியே கரைந்துவிட்டது.

1948-ஆம் ஆண்டு மே மாதம் அப்பெண்ணைப் பார்த்தேன். அன்று வரை அவள் சுகமாய்த்தான் இருந்து வந்திருக்கிறாள். (**அடுத்த இதழில் :** ஹோமியோபதி வைத்திய சாஸ்திரத்தை விரிவாகவும் தீவிரமாகவும் படிக்கவேண்டுமென்று என்னைத் தூண்டி முடிவில் 1919-ஆம் ஆண்டு முதல் என்னை ஹோமியோபதி வைத்தியராய் மாற்றிய நோய்கள்.)

# "மனிதனின் குடலில் வாழும் பூச்சிகள்"

**டாக்டர் M. P. சத்தியசீலன், ஒலகடம்.**

இப்பரந்த பூவுலகம் பல நாடுகளையும், மனிதர்களையும் விலங்குகளையும், மரம், செடி, கொடிகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. இந்த உலகில் வாழும் மனிதனும் தன் பொன்னான உடலில் பலவிதமான உறுப்புகளையும், விசித்திரமான அவயவங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளான். மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாத அவயவங்களில் குடலும் ஒன்று. இக்குடலானது சீரணிக்கப்பட்ட உணவுப் பொருள்களிலுள்ள சத்துப் பகுதியைக் குடல் உறிஞ்சிகள் மூலம் உட்கிரகித்து அதை இரத்தத்துடன் கலக்கச்செய்து நமக்கு வலுவையும், தெம்பையும், புத்துணர்ச்சியையும் இன்னும் பலவும் கொடுப்பதில் பெரும் பங்கை வகிக்கிறது.

இத்தகைய நற்காரியங்கள் பல புரியும் மனிதனின் குடலில் பற்பல பூச்சிகள் தோன்றுகின்றன; வாழ்கின்றன; மனிதனுக்குப் பெருங்கேடுகள் பல விளைவிக்கின்றன; நமது சக்தியைக் குறைக்கின்றன. நாம் உணவு அருந்தும்பொழுதும், தண்ணீர் குடிக்கும்போதும் அவை வயிற்றில் சென்று குடல்களினுள் பிரவேசிக்கின்றன. இப்படிப் பிரவேசிக்கும் பூச்சிகள் நாக்குப்பூச்சி, கொக்கிப்பூச்சி, இலைப்பூச்சி, நாடாப்பூச்சி என நான்கு வகைப்படும்.

**நாக்குப் பூச்சிகள் :—**

இது குடலில் தானாகவே தோன்றுவது இல்லை. இந்த நாக்குப் பூச்சிகளின் முட்டைகள் நீரோடும், ஆகாரத்தோடும் கலந்து வயிற்றினுள் பிரவேசிக்கின்றன. இம்முட்டைகளின் வழியாக வயிற்றில் (குடலில்) நாக்குப் பூச்சிகள் உற்பத்தியாகின்றன. இப்பூச்சிகள் குடலில் இருக்கின்ற காரணத்தால் மலம் கழிப்பவர்கள் மலம் கழிக்கின்ற இடத்திலேயே பூச்சிகளை விட்டுவிடுகிறார்கள். இப்பூச்சிகள் தண்ணீரையும், காய்கறி கீரைகளையும் பற்றிவிடுகின்றன. பூனையின் குடலி

லும் நாய்களின் குடல்களிலும் நாக்குப் பூச்சிகள் வாழ்கின்றன. இப்பிராணிகளை வீட்டுக்குள் விடுவதாலும் நாக்குப் பூச்சிகள் பரவுகின்றன. இந்த நாக்குப் பூச்சிகள் 4 அங்குலம் முதல் 6 அங்குலம் வரையிலும் காணப்படும்.

நாக்குப்பூச்சி சிறுகுடலிலேயே வாழ்கின்றன. இரைப்பைக்குள் இவைகள் பிரவேசித்து சில சமயங்களில் சுவாச குழாயையும் பற்றுவதும் உண்டு. இந்த சமயத்தில் குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். இந்தப் பூச்சி குடலில் வாழ்வதால் பசி எடுப்பது இல்லை. குமட்டல் ஏற்படும். வாந்தி, வயிற்றுவலி ஏற்படும். குழந்தைகள் அடிக்கடி மூக்கைக் குடைவதும், பற்களைக் கடித்துக்கொள்வதும் இப்பூச்சிகள் வாசம் செய்கின்ற மூல காரணத்தையே அறிவிக்கின்றது. நாக்குப் பூச்சிகள் இரண்டு ஒன்று வயிற்றில் இருந்தாலும் சரிவர சீரணம் ஏற்படாது. இரத்தம் அழியும்.

விளக்கெண்ணெய் (ஆமணக்கெண்ணெய்) கொடுத்து வருவதின் மூலம் நாக்குப் பூச்சிகளை குறைக்க முடியும். விளக்கெண்ணெய் சாப்பிடும் நாட்களில் கஞ்சியையும் வேகவைத்த முட்டையையும் ஆகாரமாகக்கொள்ளவேண்டும். அரிசி முதலிய உணவைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது. நோயாளிக்கு நல்ல பூரண ஓய்வு கொடுப்பது நல்லது.

**கொக்கிப் பூச்சிகள் :—**

இந்தப் பூச்சிகளும் குடலில் வாழ்கின்றன. குடலில் ஏராளமான முட்டைகள் இடுகின்றன. மலம் கழிக்கும்போது அவை வெளியே கொட்டப்படுகின்றன. இப்பூச்சிகள் உணவு, தண்ணீர் மூலமும் மனித உடலில் பிரவேசிக்கின்றன. செருப்பு அணியாத பாதங்களைக் குடைந்து உள்ளே செல்லும் ஆற்றல் இப்பூச்சிக்கு உண்டு. இந்தப் பூச்சிகள் குழந்தைகளின் கைகள், கால்கள், குண்டிக்தட்டுகள் மூலமாகவும் தோலைக் குடைந்து செல்கின்றன. இக்கொக்கிப் பூச்சிகள் பூமியில் சுமார் ஆறு மாத காலத்துக்கு உயிரோடு வாழ்கின்றன. பன்றிகள், ஈக்கள், கோழிகள் மூலமும் இப்



பூச்சிகள் மனிதர்களைப் பற்றும். இப்பூச்சிகள் உடலில் நுழைந்து இரத்தத்தினை உறிஞ்சி வாழ்கின்றது.

இப்பூச்சிகள் உருண்டையாகவும், வெள்ளையாகவும் இருக்கும். இப்பூச்சிகள் குடலில் ஆயிரக் கணக்கில் வாசம்செய்யும் சக்திபெற்றுள்ளன. குடலின் உட்புறத்தில் உள்ள தோலைக் கவ்விப் பிடித்துக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுகின்றன. இப்பூச்சிகளின் விஷத்தன்மையால் இரத்தசோகை, க்ஷயம், அறிவு வளர்ச்சி குன்றுதல், வயிற்றுவலி முதலியன ஏற்படுகின்றன. இந்த பூச்சி வயிற்றில் உள்ள குழந்தைகள் சுண்ணாம்பையும் மண்ணையும் சாப்பிடும். சேற்றுப்புண் தோன்றுவது இப்பூச்சிகள் உள்ளே நுழைவதின் அறிகுறியேயாகும். சுமார் ஒன்றரை ($1\frac{1}{2}$) அங்குல நீளமும், உருண்டை வடிவமும், வெண்மை நிறமாகவும் நூலினைப் போன்ற அளவுமாக இப்பூச்சிகள் காணப்படுகின்றன.

கொக்கிப் பூச்சிகளை அகற்ற காய்ச்சிய தண்ணீரைப் பருகவேண்டும். செருப்பு அணியாமல் நடக்கக்கூடாது. ஆடையின்றி குழந்தைகளை வளர்க்கக்கூடாது. பச்சைக்காய் கறிகளை நிறையச் சாப்பிடவேண்டும். பேதிக்குச் சாப்பிடும் போது ஆகாரமாக பாலையும் தண்ணீரையும் தவிர வேறு எதுவும் சாப்பிடக்கூடாது. குளம், குட்டை, ஆறு, ஆகியவைகளின் கரையோரங்களில் மலம் கழிக்கக்கூடாது.

**இலைப் பூச்சிகள் :—**

இப்பூச்சிகள் அசுத்தத்தினால் உடலில் வாழ்கின்றன. ஆசன வாயில் அரிப்பு, தினவெடுத்தல் போன்றவைகளை உண்டாக்கும். மலத்தின் மூலம் இவை வெளியே தள்ளப் படும். இப்பூச்சிகள் பெண் குழந்தைகளின் யோனியின் உள்ளே நுழைந்து அங்கு தினவை ஏற்படுத்தும். சில பெண் குழந்தைகளுக்கு இப்பூச்சி யோனியில் இருப்பதின் விளைவால் வெண்மையான போக்கு வெளிப்படுவதும் உண்டு. இலைப் பூச்சிகள் பெருங்குடலை அடுத்து வாழ்கின்றன. ஆசனவாயில்

தினவையும் அரிப்பையும் ஏற்படுத்துகின்றன. இப்பூச்சி ஒரு அங்குலத்தில் மூன்றில் ஒரு பாகமாக காணப்படுகின்றது.

இப்பூச்சிகளை அகற்ற அசுத்தம் இன்றி இருக்க வேண்டும். நகங்களை ஒட்டவெட்டவேண்டும். சத்துள்ள உணவாகவும், சுத்தமானதாகவும் சாப்பிடவேண்டும். நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாடாப் பூச்சிகள் :—

இப்பூச்சிகள் பத்து அடி நீளத்துக்குக் குறையாமல் இருபது அடி நீளம் வரை வயிற்றில் வளர்ந்து காணப்படும். நாய்களிடமிருந்து இப்பூச்சிகள் மனிதனிடம் பற்றுகின்றன. பூனையின் மூலமும் பற்றுவது உண்டு. மாட்டு மாமிசம், பன்றி மாமிசம் இவைகளின் மூலமும் இப்பூச்சிகள் மனித உடலில் பிரவேசிக்கின்றன. இறைச்சியில் காணப்படும் வெண்மையான புள்ளிகள் நாடாப்பூச்சிகள் என்பதை மக்கள் அறியமாட்டார்கள். நாடாப்பூச்சி வயிற்றில் இருந்தால் சீரணமின்மை ஏற்படும். வயிற்றில் கடுமையான வலி ஏற்படும். உடலில் இரத்தம் குன்றி சோகையாகக் கூடிய நிலை ஏற்படும். அடிக்கடி தலைவலியும், மயக்கமும் காணப்படும். இப்பூச்சி வயிற்றில் உள்ளவர்களை T. B. இலகுவாகப் பற்றும்.

நாடாப் பூச்சிகளை அகற்ற மூன்று தினங்களுக்குக் குறையாமல் பட்டினிபோடவேண்டும். இம்மூன்று தினங்களும் இரவு படுக்குமுன் ஒரு அவுன்சு விளக்கெண்ணெய் குடிக்க வேண்டும். இம்மூன்று தினங்களும் நோயாளி படுக்கையிலேயே இருக்கவேண்டும். பசி தாங்க முடியாத நிலையில் ரசம் போட்டு கொஞ்சம் சாதம் சாப்பிடலாம். வேகவைத்த முட்டை ஒன்றையும் சேர்த்துக்கொள்ளலாம். பூனை நாய்களையும் வெளியே வளர்ப்பது நல்லது.

குடலில் வாழும் பூச்சிகளை அகற்ற உதவும் ஹோமியோபதி மருந்துகளைச் சற்று ஆராய்வோம்.



**1. சல்பர்** (Sulphur) :—

குழந்தைகளின் வயிற்றில் புழு பூச்சி தோன்றி இரவில் குழந்தைகள் போர்வையை உதறி எரியும். அந்த சமயத்தில் உடல் கொதிப்பாகவும் காணப்படும்.

**2. சான்டோனினம்** (Santoninum) :—

குடலில் வாழக்கூடிய வட்டப்புழு திரிப்புழு இவைகளை களைந்து எறிவதற்கு இது நல்ல மருந்து.

**3. ஸபடிலா** (Sabadilla) :—

புழு, பூச்சிகள் இருப்பதின் விளைவால் வலிப்புகள், நடுக்கங்கள், துடிப்புகள் ஏற்படுவதை இது அகற்றும்.

**4. ஸீனு** (Cina) :—

ஹோமியோபதி டாக்டர்களால் குடலில் உள்ள பூச்சிகளை அகற்றுவதற்கென்று பொதுவாகக் கொடுக்கக்கூடிய நல்ல மருந்து.

**5. ஸ்டாபிஸாக்ரியா** (Staphysagria) :—

குழந்தைகளின் வயிறு கட்டிபோல் காணப்படுதல், வயிற்று வலி காணப்படும்.

**6. ஸ்டான்னம் மெடாலிகம்** (Stannum Met) :—

குடல்களில் பூச்சி இருப்பதின் விளைவால் சிறுநீர் நிறமற்று காணப்படும். கீழ் வயிற்றில் கடுமையான வலிதோன்றும். இந்த வலி அடிக்கடி ஏற்படும். குழந்தைகள் தூக்கத்தில் முனகிக்கொண்டேயிருப்பார்கள். சில சமயங்களில் வலிப்புகள் காணப்படும்.

**7. ஸ்பைஜீலியா** (Spigelia) :—

வயிற்றில் வாழும் புழு பூச்சிகளின் விளைவால் நல்ல வாய் திக்கு வாயாக மாறும். உடல் வெளுத்துவிடும். சருமம் சுருங்கிவிடும். சில இடங்களில் வீக்கம் இருக்கும்.

**8. கலேடியம் செகினம்** (Caladium Seguinum) :—

யோனியில் அரிப்பு காணப்படுதல். யோனியிலிருந்து வெண்மையான போக்கு காணப்படும்.

**9. டெரிபிந்தின** (Terebinthina) :—

வட்டப் புழுவும், திரிப்புழுவும் குடலில் வாழ்கின்ற காரணத்தால் மூச்சுக் காற்றானது நாற்றமாக இருப்பதற்கு இம்மருந்து சிறந்தது.

**10. மாரம் வேரம் டியூக்ரியம்** (Maram Veram Teucrium) :-

குடலில் வாழக்கூடிய எல்லாவிதமான பூச்சிகளையும் புழுக்களையும் அகற்றக் கூடிய ஆற்றல் இம்மருந்துக்கு உண்டு.

**11. மெக்னீசியம் மியூரியாடிகம்** (Magnesia Mur) :—

இது நாடாப் புழுக்களை அறவே அகற்றும் தன்மை வாய்ந்தது. ஆரம்பக் கட்டத்தில் இதைக் கொடுத்தால் எல்லாப் புழு பூச்சிகளையும் அகற்றிவிடும்.

ஆவணக்காப்பக


# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்பச் சிகிச்சை செய்வோரும், ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும், அதிக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விவரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
" பால நிலையம் "
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

# டான்ஸில்ஸ்

இரட்டையர்களாவர். சுவாசகோசத்தில் புகையும் தூசியும் புகுந்து நோய்கள் உண்டாகாதபடித் தடுத்து, தாமே நோயுறும் தியாகிகள்!

அப்படிப்பட்ட தியாகிகளை வெட்டி எறிந்தால் உடலுக்கு ஆயுள் உள்ள வரை ஊனம்தான் என்று எல்லா டாக்டர்களும் ஒத்துக்கொள்கிறார்கள்: ஆனால், டான்ஸில் வீங்கி சீழ்பிடித்தால் அதைக் குணமாக்க வழி அறியாது நான் கத்தியைத் தேடுகிறார்கள்.

அச் சமயத்தில் ஹோமியோபதியின் பெயரை நிலை நாட்ட, எங்கள்

## ஸில்டோஸிஸ்

உபயோகித்தால் போதும்.

* * *

இந்த இனிய மருந்தினால், டான்ஸில் குணமடைந்து சுய வடிவுக்குச் சுருங்கி தன் சேவையைச் சரிவரச் செய்கிறது.

விலை: 50 மாத்திரைகள் கொண்ட
ஒரு பாட்டில்: ரூ. 2-50.
500 ,, ,, ரூ. 18-00.

(அனுப்பும் செலவு தனி.)

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.


Edited and Published by Dr. V. S. Subramaniam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1.